
# களத்தில்



எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

(09.09.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (194) அன்பளிப்பு : 60 p



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# இரு தரப்பினரே உண்டு

கோரமான இனஅழிப்பு யுத்தம் ஒன்று எமது தாய் மண்ணிலே சிறீலங்காவால் திணிக்கப்பட்டு பதினாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்நேரத்தில் மக்களையும் மண்ணையும் அடிமை கொள்ள முனைந்து நிற்கும் ஆக்கிரமிப்பு அரசாங்கம் சிறீலங்கா - மக்களையும் மண்ணையும் பாதுகாக்க தம்மை முழுமையாக அர்ப்பணித்து நிற்கும் தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகள்- என்ற இரு தரப்பினரே எமது மண்ணில் உள்ளனர். இந்த இரு தரப்பினரையும் ஆதரிக்கும், உதவும் அனைவரும் அவர் அவர்களின் நோக்கினை அடைவதற்கு உதவுகின்றார்கள் என்பதே யதார்த்தம்.

இந்த யதார்த்தத்துடன் நோக்குகையில் இரு தரப்பினர்க்கும் எவ்வகையில் உதவி செய்பவர்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் அவரவர் சார்பாக தலையீடுகளை மேற்கொள்பவர்களாகவே விளங்குகின்றனர்.

ஆக்கிரமிப்பாளனாக உள்ள சிறீலங்காவைப் பொறுத்தவரை காலனித்துவ பிரித்தானிய அரசாங்கம் தோற்றுவித்த தன்மைகளால் அதனை இலங்கைத்தீவின் சட்டபூர்வமான அரசாங்கமாக உலகு கருதுகின்றது. இதனை தனக்குச் சாதகமான ஒரு அம்சமாக கருதும் சிறீலங்கா சர்வதேச வல்லாண்மை சக்திகளுக்கு ஏற்ற சந்தை வசதிகளையும் இராணுவ நலன்களையும் தான் தோற்றுவித்து அவைகளின் ஆதரவினை சகல நிலைகளிலும் தனக்கு ஏற்ற விதத்தில் பெற்று தான் தமிழீழ மக்களுடைய உயிரை, உடலை, சொத்துக்களை, தேசத்தை அழிக்கும் சர்வதேச குற்றச் செயல்களை பாதுகாப்பு நடவடிக்கைகள் என நியாயப்படுத்தி வருகிறது.

இதனை இனஅழிப்பெனத் தெரிந்த நிலையிலும் தங்கள் சந்தை இராணுவ நலன்களை பேணும் நோக்கில் உலகின் வல்லாண்மைகள் சிறீலங்கா அரசாங்கத்திற்கு சகல நிலைகளிலும் தமது ஆதரவை நல்கி நடைபெறும் யுத்தத்தில் சர்வதேச தலையீட்டினை செய்து வருகின்றன. இவ்வாறாகத் தாங்கள் சிறீலங்காவின் யுத்தத்திற்கு தொடர்ந்து அளித்துவரும் உதவிகளை நியாயப்படுத்த உலகின் வல்லாண்மைகள் ஜனநாயகம் நிலைபெற உதவுவதாகவும், மனித உரிமைகளை சிறீலங்கா பாதுகாக்க ஆதரவு அளிப்பதாகவும் விளக்கங்கள் அளிக்கின்றன. ஆனால் நடைமுறையில் இலங்கை அரசாங்கம் என்ற பெயருடன் காலனித்துவத்தால் சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்றம் இலங்கைத் தீவில் உருவாக்கப்பட்ட நாள் முதல் 1972 வரையிலான காலகட்டத்தை எடுத்தாலும் சரி பின்னர் தன்னிச்சையாக சிங்கள பௌத்த பேரினவாதம் சிறீலங்கா என்ற குடியரசை உருவாக்கிய 1972 முதல் இன்று வரையான காலகட்டத்தை எடுத்தாலும் சரி சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் என்றுமே ஜனநாயக அரசாக நிகழவில்லை. ஜனநாயகத்தினை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் அதன் எல்லா நிலைகளிலும் மறுத்து சிங்கள பௌத்த குடியரசொன்றினை உருவாக்கி அதனை தமிழ் மக்கள் மீதான சட்டபூர்வ அரசாக மாற்றுவதற்கான கருவியாகவே ஜனநாயகத்தை பயன்படுத்தி வந்துள்ளன. சட்டவாக்கம் சட்ட அமுலாக்கம் நிர்வாகம் என்ற பாராளுமன்றத்தின் வலுவாக்கத்திற்கான மூன்று துறைகளையுமே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சிந்தனைகளை நெறிப்படுத்தி அமுலாக்குவதற்கான ஊடகங்களாக சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் பயன்படுத்தின. இவைகளின் விளைவாக இலங்கைத்தீவில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் ஜனநாயக ஆட்சியினைச் செயற்படுத்த வேண்டுமென்ற சிந்தனையற்ற ஆட்சியாளர்களாகவே என்றும் விளங்கின- விளங்குகின்றன-விளங்கப்போகின்றன. இதனாலேயே தமிழின இனவெறுப்பை, தமிழின அழிப்பை சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் தமது ஆட்சியின் செயல்நெறிகளாக கைக்கொண்டன- கைக்கொள்கின்றன. இந்த இனவெறுப்பின் பின்னணியில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமது பொருளாதாரத் தோல்விகளை சிங்களவர்கள் உணராதவண்ணம் செயற்படுகின்றன. சிங்களத் தேசியத்தின் எல்லா பின்னடைவுகளுக்கும் தமிழ்த்தேசியத்தின் இருக்கையே காரணமாகக் காட்டப்பட்டு சிங்களத் தேசியத்திடம் இருந்து தமிழ்த்தேசியத்தை அழிப்பதற்கான ஆட்பலமும் ஆசிகளும் ஆதரவும் திரட்டப்பட்டன, திரட்டப்படுகின்றன. இந்நிலையில் தமிழ்த் தேசியம் தன்னைத்தானே பாதுகாக்க, தான் காலனித்துவத்திடம் இழந்த தனது தமிழீழத் தாயகத்தின் இறைமையை- தன்னாதிக்கத்தை மீளப்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது. இந்த மண்மீட்பை, தமிழீழ மக்கள் தாம் உயிர் வாழ்வதற்கான உடமைகளைப் பேணுவதற்கான அடிப்படைத் தேவையாகக் கருதுவதனால் தம் இன்னுயிர்களையே தம் தேசத்தினைக் காக்கும், மீட்கும் ஆயுதங்களாக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தேசிய விடுதலை இயக்கமாக மாறிநிற்கின்றனர். இந்த தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தின் பலமாக நிற்பவர்கள் தமிழீழ மக்களே. அவர்களில் கணிசமான தொகையினர் சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள இனங்காணக்கூடிய அச்சத்தின் விளைவாக சர்வதேச நாடுகளில் அரசியல் தஞ்சம் அடைந்த நிலையிலும்கூட தம் தேசத்தின் மீட்புக்கு தாம் பலமாக விளங்க வேண்டிய தேவையினை தம்மால் இயன்றளவுக்கு பூர்த்தி செய்து வருகின்றனர். தமிழீழத்தின் உள்ளும் சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் மக்கள் மீதான யுத்தங்கள் முற்றுகைகளால் ஏதிலிகளாக வாழும் சூழ்நிலைகளை சந்தித்த நிலைகளிலும்கூட தமிழீழ மக்கள் தமது மேலான அரசியல் பணிவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அளித்து வருவதினாலேயே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் இன்று வெற்றிகரமான முறையில் மண்ணின் மக்களின் விடுதலையை நோக்கி நகர்கிறது. இதனால் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களை எதிரிகளாக கருதுகிறது. தமிழ் மக்களின் தாயகத்தை அழிக்கவேண்டிய பொருளாகக் கருதுகிறது. தமிழ் மக்களை அழிப்பதினாலும் தமிழீழத் தேசத்தின் உட்கட்டுமானங்களைச் சிதைப்பதினாலும்தான் தமிழீழத்தை அடிமை கொள்ள முடியும் என்ற முனைப்புடன் அதனை தனது அரசியல் செயற்திட்டமாகக் கொண்டு இராணுவ நடவடிக்கைகள் மூலம் செயற்படுத்தி வருகிறது. தமிழீழ மக்களாகிய நாம் சிறீலங்காவைப் பொறுத்தவரை அழிக்கப்பட வேண்டியவர்கள். எங்கள் தேசம் சிறீலங்காவைப் பொறுத்தவரை அழிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த இலக்குடன் இனவெறி ஆட்சி நடாத்தி வரும் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்களையே இராணுவ முற்றுகைகளையே பொருளாதாரத் தடைகளையே தான் என்றும் தனது ஆட்சிக் கருவிகளாக கையாளுமே தவிர அது தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பேண கனவிலும்கூட எண்ணிப் பார்க்க மாட்டாது. இந்நிலையில் அதனால் எந்த விதமான மனித உரிமைகளை பேணுவதற்கான உருப்படியான திட்டங்களையும் செயற்படுத்த முடியாது. கண் துடைப்புக்காக தமிழ் மக்களால் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டு வரும் மனித உரிமை முறைகேடுகளை திசை திருப்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுவதுபோல் காட்டப்பட்டு திரை மறைவில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு உயர்ச்சிகளும் புகழ்ச்சிகளும் அளிக்கப்படுகிறது. இந்நிலையில் மனித உரிமைகளை பேண சிறீலங்காவுக்கு தாம் ஆதரவளிப்பதாக கூறும் நாடுகள் தம் கூற்றின் பொருத்தப்பாடு குறித்து சிந்திக்கவேண்டிய நேரம் இது. தமிழர்களின் தமிழர் தேசத்தின் அழிவினை கணாக்கண்டு அதனை நனவாக்க அரசியல் செயற்திட்டங்கள் வகுக்கும் சிறீலங்காவால் தமிழர்களுக்கு பாதுகாப்பான அமைதியினை உருவாக்கும் தீர்வு எதையும் முன்வைக்க என்றுமே இயலாது. இருப்பினும் தனது இராணுவ ஆக்கிரமிப்புக்களுக்கான சர்வதேச ஆதரவுகளை, நிதிப்பலத்தை காலஅவகாசத்தைத் தேட, சிறீலங்கா எப்பொழுதும் அதிகார பரவலாக்கல், பேச்சுவார்த்தை என்ற வார்த்தை ஜாலங்களை வெளிப்படுத்திக் கொண்டே தனது இராணுவ நடவடிக்கைகளை தொடரும். இந்த நிலையில் சிறீலங்கா அரசாங்கத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என உலகை நம்பவைப்பவர்களும் நடிப்பவர்களும் ஆதரவு கொடுப்பவர்களும் தமிழீழ தேசிய விடுதலைப் போரில் தமிழீழ மக்களுக்கு எதிராக செயற்படுபவர்களே. தமிழ் மக்களிடை இன்று கட்சி அரசியல் இல்லை காரணம் அவர்கள் ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அந்த யுத்தம் வெல்லப்பட்டாலே தமிழ் மக்களிடை ஜனநாயக ஆட்சி முறைமைகள் தோன்றும். இந்த நிலையில் தமிழ் மக்களிடை ஜனநாயகம் நிலவுவது போல் சிறீலங்காவின் தேர்தல் நாடகங்களில் மேடைபெறுபவர்களும் - பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல சிறீலங்காவின் அவசரகால நிலை அமுலாக்கத்திற்கு சிறீலங்கா பாராளுமன்றத்தில் வாக்களித்து அனுமதி வழங்கிவிட்டு அந்த அவசரகால நிலையினால் வதைக்கப்படும் மக்களுக்கு காருண்ய உதவிகள் செய்பவர்களாக இரட்டை வேடமிடும் வேடதாரிகளும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எதிரிக்கு ஆதரவாக தலையீடு செய்பவர்களே. இந்தகையோர் சிறீலங்காவின் அரசியலில் பங்கேற்பதை சிறீலங்கா தமிழர்களின் பங்கேற்பாக உலகிற்கு வெளிப்படுத்தி தனது சட்டவிரோத அரசாங்கத்தை தமிழ் மக்களின் அரசாங்கமாக உலகிற்கு அத்தாட்சிப்படுத்தி வருகிறது. இதனால் தமிழீழ மக்களின் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக உலகால் பார்க்கப்படும் பரிதாப நிலை நிலவுகிறது. ஆகையினால் தமிழீழ மக்களின் உயிர்கள் உடைமைகள் தேசம் அழிக்கப்படுவதற்கு உலகு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதற்கு இவர்களே மூலகாரணிகளாக உள்ளனர். இந்நிலையில் இரு தரப்பினரே தமிழீழ மண்ணில் உள்ளனர். ஒரு தரப்பு தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிறீலங்கா. மற்றத் தரப்பு அதனை எதிர்த்து மண்ணின் மக்களின் விடுதலையை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்.

இந்த உண்மையை உலகிற்குத் தெட்டத் தெளிவாக்க வேண்டியவர்கள் புலம் பெயர் தமிழர்களாகிய நாங்களே. நாம் விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கும் நிதி பங்களிப்புக்களும் பகிரங்க ஆதரவுகளும் உலக நாடுகள் இந்த உண்மையை தானாகவே உணர வைக்கட்டும்.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072 | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5 | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning | FRANCE<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris | GERMANY<br>TCC<br>Postfach 340251,<br>51624 Gummersbach | ITALY<br>TCC<br>Via Vinzenzo Di Pavia No14,<br>90138 Palermo |
| NETHERLANDS<br>TCC<br>P.O Box 18600,<br>2502 EP Den Haag | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432 |




## அபகரிப்பின் பின்னணி

1986 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் காணி விவகார அமைச்சர் காமினி திசாநாயக்கா வலிகாமம் வடக்கில் நிலங்களைப் பறிப்பதற்கான அரசாணையை வெளியிட் வெளியே தெரியவந்த போது அல்லது தெரியப்படுத்தப்பட்டபோது வழமை போல் சந்திரிகாவை மேன்மை தங்கியவர் என துதிபாடும் கொழும்புத் தமிழ் கனவான்கள் சந்திரிகாவிற்கு மனு அனுப்பி நிலப்பறிப்பால் கோவில்கள் பாதிக்கப்படும் எனக் கூறி தடுத்து நிறுத்தக் கூறினர். சந்திரிகா தலையிட்டு தடுத்து நிறுத்தப்பட்டதாக அடுத்து அறிவிக்கப்பட்டது. இதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது ஆனால் யூன் 8 ஆம் திகதி இரகசியமாக நிலப் அனுப்பியவர்கள் இவ் உண்மை வெளிவந்த பின்பும் கூட சந்திரிகாவின் மீது விசுவாசம் வெளிக்காட்டி புதிய மனு தயாரித்தனர். புதிய வர்த்தமானி அறிவிப்பு ஆகஸ்ட்டில் விடுக்கப்பட்டாலும் அதில் அமைச்சரின் அறிவிப்பு யூன் 28 என்றே உள்ளதால் தவறுதலாக இது இடம்பெற்றிருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆனால் சந்திரிகாவின் பணிமனை இதுபற்றி பதிலளிக்கவில்லை.

# மேன்மை தங்கிய சந்திரிகாவும் வலிகாமம் நிலப்பறிப்பும்

சிங்கள தேசத்தின் சனாதிபதி சந்திரிகா தனது வேலைப் பளுக்களுக்கிடையே பிறிதொரு அமைச்சின் கீழ்வரும் பொலநறுவையில் உள்ள முன்னைய தலதா மாளிகையைப் பற்றிய சிறப்பு அறிக்கை யொன்றை அண்மையில் கோரியிருந்தார். சத்மாகல் பிரசாதா என அழைக்கப்படும் சிங்கள பௌத்த பண்பாட்டு முக்கோணப் பிரதேசத்தில் இடம்பெறும் பௌத்த அகழ்வாராட்சி பற்றி அறியவே சனாதிபதி தீவிர அக்கறை எடுத்துச் செயல்பட்டார். இதேகாலகட்டத்தில் அவரது ஆக்கிரமிப்பு அரசு தமிழர்களின் தொன்மை மிக்க வழிபாட்டுத் தலங்களான மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் என்பனவற்றை இராணுவம் கவீகரித்து முகாம் அமைப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டது. சிங்கள பேரினவாத்தின் கொடூர முகத்தை தோலுரிக்கும் இவ் இரட்டை அணுகுமுறை தமிழர்களின் விடுதலைப் போரை விரைவுபடுத்தும் தேவையை புலப்படுத்துகின்றது.

யாழ். குடா ஆக்கிரமிப்பின் நோக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்ற முயலும் சந்திரிகாவின் சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களின் சமூக, அரசியல், பண்பாட்டு வாழ்வை சிதைப்பதற்கான அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஒருபுறம் குடாநாட்டினை தமிழர்களின் பண்பாட்டு தொட்டில் எனவும் அங்கு தமது அரசு சனநாயகத்தை மீட்டு காத்திட முகாமிட்டுள்ளதாக சுக்குரலிட்டு சொல்லிவரும் வேளையில் மறுபுறம் பண்பாட்டுத் தொட்டிலை சிதைத்து சிறுமைப்படுத்தி அழிப்பதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது. குடாநாட்டினை சிதைப்பதைக் குறியாகக் கொண்ட அரசு அங்கே நிரந்தர சிதைப்புக்கான வித்துக்களாக நிலப்பறிப்பை மேற்கொண்டு வருகின்றது. மெதுவாக தமிழர்களின் இடப்பெயர்வை நிரந்தரமாக்கி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சிங்கள இருப்பை நிலைநிறுத்துவதற்கான இரகசிய திட்டத்தை அமுல்படுத்த முனைகின்றது.

அம்பாறை, திருமலை, மூதூர் பகுதிகளை ஆக்கிரமித்து சிங்களப்பிரதேசங்களாக மாற்ற முயல்வதைப் போன்று யாழ். குடாநாட்டில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் சிங்கள வலயங்களை நிறுவும் திட்டத்தின் முன்னோடியாக வலிகாமம் பகுதியில் பெரும் நிலக் கவீகரிப்பை மேற்கொண்டுள்ளது. சுமார் 300 ஏக்கர் மக்கள் குடியிருப்புக்களை உத்தியோகபூர்வமாக பறிப்பதாக சிங்கள வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் உள்ளிட்டதாக இவ் அபகரிப்பு அடங்கி உள்ளது.

டார். தமது ஆக்கிரமிப்பை சட்டபூர்வமாக்கவும் நிலைநிறுத்துவதற்குமான இவ் அறிவிப்பானது இவ்வருடம் முற்பகுதியில் மீள தலைகாட்டியது.

தமது இராணுவ முகாங்களை சூழ



வுள்ள நிலங்களை பாதுகாப்பு வலயங்கள் என பிரகடனப்படுத்திவந்த ஆக்கிரமிப்பு இராணுவம் அதனை சிதைத்து வந்தது. தமிழ் மக்களை இரகசியமாக கொன்று புதைப்பதற்கான நிலங்களாகவும் இது பயன்படுத்தப்பட்டது. இப் பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாதவாறு இராணுவத்தால் விரட்டப்பட்டுவந்தனர். ஆனால் இவை அனைத்தையும் தாண்டி உலக பார்வையில் இப்பகுதியின் சட்டபூர்வ உரிமையாளர்களாக தமிழ் மக்கள் திகழ்ந்தனர்.

இம் முரண்பட்ட சட்டவிரோத தன்மை சிங்களத்தின் நீண்ட ஆக்கிரமிப்புத் திட்டத்திற்கு பாதகமானதாக இருந்தது. பறிக்கப்பட்ட நிலங்களை சிங்களக் குடியேற்றங்களால் நிரப்புவதற்கு இச் சட்டபூர்வ நிலை அச்சுறுத்தலானது.

இந்நிலையில் இப் பிரதேசங்களை சட்டபூர்வமாக பறிப்பதாக அறிவிப்பதன் மூலம் சிங்களவர்கள் குடியேற்றப்படும் போது எழும் தமிழர்களின் உலகளாவிய எதிர்ப்பை சட்டத்தைக்காட்டி மறுக்கும் வித்தையை கையாளலாம்.

இவ் இரகசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த புறப்பட்ட சந்திரிகா தனது வழமையான பொய் உரைகளையும் கவனத்தை திசைதிருப்பும் நுட்பத்தையும் இங்கு பயன்படுத்தினார். முதலில் இவ் கவீகரிப்பு தொடர்பான செய்திகள்

பறிப்புக்கான அறிவிப்பு வெளியானது. பறிக்கப்பட்ட நிலத்தில் இராணுவம் தன் திட்டங்களைத் தொடங்கியது. தாம் காணியைப் பறித்து இணைத்துவிட்டதாக பாலாலி இராணுவ அதிகாரிகள் அறிவித்தனர். அங்கு இராணுவ முகாமிற்கு மரக்கறிகளை பயிரிடப் போவதாக அதிகாரிகள் கூறினர். ஆனால் ஆகஸ்ட் 28 ஆம் திகதி இவ் அறிவிப்பு வெளியான அரச வர்த்தமானி கொழும்பில் கிடைக்கப்பெற்றது.

சந்திரிகாவின் தலையீட்டை உண்மை என நம்பிய அல்லது சந்திரிகாவின் பரப்புரைத் தேவைக்கு ஏற்ப மனுக்கள்

சந்திரிகா அரசின் பொய்யுரைகளும் இரகசியத் திட்டங்களை அமுல்படுத்தும் வேகமும் தமிழர்களின் தாயகப் பிரதேசத்தை பறிக்கும் திட்டங்கள் எவ்வாறு நுட்பமாகத் தயாரிக்கப்படுகின்றன என்பதற்கு ஆதாரம் ஆகும். தனது ஆளுமையை உலக அரங்கிற்கு நியாயப்படுத்த மார்ச்சில் நிலப்பறிப்பை தடுத்து நிறுத்தியவராகக் கூறிய சந்திரிகா ஆகஸ்டில் நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்கள குடியேற்றத்திற்கான பணிகள் ஆரம்பமாகிய போது செம்மணிப் புதைகுழிகளைச் சுற்றி வேயப்படும் போலி பரப்

**நாதன்**

புரை சுவர்களை முன்னே நிறுத்தி மனித உரிமைகள் பற்றி கருத்துக் கூறுகின்றார்.

இவ் இரட்டை வேடம் தரித்த பேரினவாதிக்கு மனுக்கொடுக்கும் கொழும்புத் தமிழ்க் கனவான்கள் வன்னியில் உணவுத் தடைக்கு எதிராக மக்கள் நடாத்திய போரில் இருந்து பாடம் கற்கவேண்டும். உரிமைகள் மனுக்களினால் கிடைப்பவையல்ல. மாறாக அவை போராடிப் பெறப்பட வேண்டியவை என்பதே வன்னி போராட்டத்தின் வெற்றியும் யாழ் நிலப் பறிப்பும் புரியவைக்கும் செய்தியாகும்.

சிங்கள இராணுவம் முற்றாக தமிழர் தாயகத்தில் இருந்து ஏன் விரட்டப்பட வேண்டும் என்பதற்கு தமிழர்கள் மற்றுமொரு நியாயமான காரணத்தை பெற்றுள்ளனர்.

## காணாமல்போன 174 பேரின் 9வது நினைவு தினம்

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் 05.09.1990-ம் ஆண்டு [illegible] காட்டிக் கொடுக்கும் முகமூடிகளின் துணையுடன் புகுந்த கொக்கட்டிச்சோலை சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த 158 பேரை [illegible] இழுத்துச் சென்றனர். இதன் பின்னர் இவர்கள் அனைவரும் காணாமல் போயினர். பின்னர் 23.09.90-ல் 16 பேர் காணாமல் போயினர்.

இந்த காணாமல் போன 174 தமிழ் மக்களினதும் 9வது ஆண்டு நினைவு தினம் இம்மாதம் 05ம் திகதி தென்தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. [illegible] நம் மக்கள் நினைவு கூர்ந்தனர்.



# தமிழர் வாழ்வு தமிழரோடு

## தமிழர்களை நம்பும் நிலையில் சிறீலங்கா அன்றும் இன்றும் என்றும் இல்லை.

சிறீலங்கா அரசுக்கு முண்டு கொடுத்த - கொடுக்கும் தமிழர்களை நம்பும் நிலையில் சிறீலங்கா அன்றும் இன்றும் என்றும் இல்லை. சிறீலங்காவின் அரசாங்க அதிபர்களுக்கு சிறீலங்கா காட்டிவரும் மரியாதை இதனை தெட்டத்தெளிவாக்குகிறது. சிறீலங்கா அரசாங்க அதிபர்கள் மக்களது அழுத்தங்கள் தாங்கொணாது மக்களின் உணவுத் தேவைகள் அத்தியாவசியத் தேவைகள் குறித்து பேச முற்பட்டால் அடுத்த விநாடியே அவர்களை இடமாற்றம் பதவி மாற்றம் செய்து அவர்களின் வாயினை அடைப்பது சிறீலங்கா வழமையாக செய்து வரும் உத்தி. அது மட்டும் போதாது என்று அவர்களை சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்து தனது படையினர் மூலம் வாட்டி வதைப்பது சிறீலங்கா செய்யும் சர்வ சாதாரண நிகழ்வாகி வருகிறது. இதன் மூலம் பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தை தோற்றுவித்து அவர்கள் மறந்தும் உண்மைகளைப் பேசாது தடுப்பது சிறீலங்காவின் நோக்காக இருக்கலாம். ஆனால் சிறீலங்காவுக்கு விசுவாசமாக நடந்த குற்றத்திற்காக அதன் அரசாங்க அதிபர்களாக விளங்கிய தமிழர்கள் பெறும் இறுதிப்பரிசு அதன் படைகளினால் நொறுக்கப்படுவதும் தாங்கள் இயல்பாகவே அடைய வேண்டிய பதவி வழி உயர்வுகளைக்கூட இழந்தவர்களாக பரிதவிப்பதுமேயாகும். இந்த வரிசையில் கடந்த வாரம் மன்னார் அரசாங்க அதிபர் மரியதாஸ் குரூஸை சிறீலங்கா வாட்டி வதைக்கத் தொடங்கியுள்ளது.

முதலில் அரசாங்க அதிபரின் வாகனச் சாரதியைக் கைதாக்கி அரசாங்க அதிபரைக் கைது செய்வதற்கான நாடகத்தை ஆரம்பித்தது. அடுத்து கொழும்பில் வைத்து மன்னார் அரசாங்க அதிபரை கைதுசெய்த சிறீலங்கா அவரைத் தனது படையினரின் விருந்தாளியாக்கியது. வழமை போல் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. அதனை சிறீலங்காவின் பிரச்சார சாதனங்கள் பரப்புரை செய்து தமது அரசாங்கத்தின் செயலுக்கு நியாயம் கற்பித்தன. கூடவே திடுக்கிடும் தகவல் ஒன்றையும் இந்தப் பிரச்சார சாதனங்கள் வெளியிட்டன. மன்னார் அரசாங்க அதிபரின் வீட்டில் பயங்கர ஆயுதங்கள் இருந்தனவாம் ஆனால் அது அவருக்கு தெரியாதாம் என்பதே அச்செய்தி. அப்படியானால் அந்த ஆயுதங்களை அங்கே கொண்டு போய் வைத்தது யார்? அரசாங்க அதிபருக்கு அது தெரியாது என்றால் அவரைக் கைது செய்திருப்பது ஏன்? இதற்கு சுருக்கமான பதில் அவர் தமிழர் என்பது ஒன்றேயாகும். இவ்விதமான நெருக்குதல்களை சிறீலங்கா தனது நிர்வாகத்தில் உள்ள தமிழ் அதிகாரிகளுக்கு [illegible] தன் மூலம் அவர்களைப்போல் தமிழ் மக்கள் ஏற்படுத்தும் தாக்கங்களுக்கு ஏற்ப அவர்கள் எந்த நிர்வாக நடவடிக்கைகளையும் ஏற்படுத்தாது இருக்கப் பழக்குகின்றது. இதற்கிடையே சந்திரிகா தனது அரசில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதாக உலகிற்கு காட்டும் நோக்கில் கல்கிசை பொலிசார் மன்னார் அரசாங்க அதிபரை கைதுசெய்து விசாரிப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறாக சிறீலங்கா தனது நிர்வாகத்தில் உள்ள தமிழர்களை சந்தேகிப்பதினால் ஏற்பட்ட அச்சத்தினால் போலும் வெளிநாடுகளில் சிறீலங்காவின் வெளிநாட்டு நிர்வாக சேவைகளில் பணியாற்றிய பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் நாடு திரும்பாது வெளிநாடுகளில் பதுங்கி வாழ்கின்றனர். குறிப்பாக 1983 யூலை சிறீலங்காவின் இன அழிப்பை அடுத்து பெருமளவிலான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரி புலம் பெயர்ந்ததை அடுத்து சிறீலங்கா தமிழ் அதிகாரிகளை வெளிநாட்டு தூதரகங்களில் நியமித்து உலகின் கண்களில் தான் தமிழ் மக்களுக்கு தனது நிர்வாகத்தில் கணிசமான பங்கினைக் கொடுப்பதாக நடித்தது. இந்த நாடகத்தில் நடிப்பதற்கு வந்த தமிழ் அதிகாரிகள் பலர் தமது சேவைக்காலம் பூர்த்தியான நிலையில் மீளவும் சிறீலங்காவுக்கு திரும்பாது வெளிநாடுகளில் பதுங்கிக் கொண்டனர். இவர்களை சிறீலங்கா கைவிட்ட நிலையில் இவர்கள் தமது தமிழ் உடன்பிறப்புக்களையும் ஏறெடுத்துப் பார்க்க மனமுறுத்தல் உள்ளவர்களாகத் தவிப்பதை வெளிநாடுகளில் காணக்கூடியதாக உள்ளது.



சிறீலங்காவின் தமிழ் நிர்வாகிகளுக்குத்தான் இந்த நிலை என்றால் தற்பொழுது சிறீலங்காவை சுற்றிச் சுற்றி வந்து சந்திரிகாவுக்குப் பாதபூசை செய்யும் சிறீலங்கா இராணுவத்தின் கூலிக்குழுக்களான தமிழ்க்குழுக்களுடைய நிலை அதைவிட மோசமாகிறது. சிறீலங்கா இராணுவமே தங்கள் கதி என வாழ்ந்த இவர்களை அதே சிறீலங்கா இராணுவம் சோதிப்பதும் ஆயுதங்களைப் பறிப்பதும் தாங்களே கேட்டுக் கொடுத்த இவர்களின் முகாம்களை தாங்களே எரிப்பதும் என விதம் விதமான வகைகளில் இந்தத் தமிழ்க் குழுக்களிடம் சிறீலங்கா தனது சந்தேக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அண்மையில் வவுனியா மன்னார் வீதியில் கிளைமோர் தாக்குதல் ஒன்றில் காயமடைந்த சிறீலங்காப் பொலிசாருக்கு அவசர உதவிகள் செய்து கொண்டிருந்த சிறீலங்கா இராணுவ கூலிப்படையான ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் மீது சிறீலங்காப் படையினர் கூட்டத்தில் விசாரணை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் கொல்லப்பட்டார். பலர் எறியப்பட்டுக் கடும் காயங்கள் அடைந்தனர். ஆயினும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கொழும்புத் தலைமை இது குறித்து மௌனமாக இருந்து தன் பதவியினைக் காப்பாற்றிக் கொண்டது. இதற்கிடையே சிறீலங்கா இராணுவத்தின் மற்றொரு கூலிக்குழுவான ரெலோ தனது முகாம் ஒன்றை சிறீலங்காப் படைகள் எரித்து விட்டதாக சந்திரிகாவிடம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறது. இப்படியான அனுபவங்கள் எல்லாம் இவர்களுக்கு ஏற்படுவதற்குக் காரணம் இவர்களை தமிழர்களாக சிறீலங்கா பார்ப்பதுதான். இவர்கள் தாங்கள் தமிழர்கள் அல்ல என சிறீலங்காவின் படைகளின் விசுவாசிகள் எனக்காட்டப் படாதபாடுபட்டு தமிழர்களையும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தையும் காட்டிக் கொடுத்தாலும்கூட இவர்களை நம்புவதற்கு சிறீலங்காவோ சிங்களத் தேசியமோ என்றும் ஆயத்தமாக இல்லை என்பதையே இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவர்களின் இந்தப் பரிதாப நிலையினை உணர்ந்த தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மீளவும் இவர்களை இவர்களது சிறீலங்காவுடன் செயற்படும் தன்மையினை விட்டு விலகி சாதாரண வாழ்வுக்கு திரும்பும்படியும் தமிழர்களுடன் இணைந்து வாழும்படியும் அழைப்பு விடுத்துள்ளார். அது மட்டுமல்லாது தங்களுடன் இணைய விரும்புபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். இந்த இறுதி நேரத்திலாவது இவர்கள் திருந்தி தமிழர்களாக வாழவேண்டுமென்ற ஆசை எல்லாத் தமிழர்களுக்கும் உண்டு. இதன் மூலம் இவர்களது வாழ்வு பாழ்படுவதைப் பயனுள்ளதாக்கி அர்த்தமுள்ள வாழ்வாக மாற்ற இவர்கள் மாற்றிக் கொள்ள முடியும். அதே வேளை இவர்கள் இதே பாணியில் தமிழர்களின் உயிரை உடமை தேசத்தை அழிக்கும் சிறீலங்காவிற்கு தொடர்ந்தும் துணை போவார்களானால் [illegible] புலிகள் புகுந்து தமிழீழ விடுதலைக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கையில் இவர்களும் தமிழீழ மக்களின் எதிரிகள் [illegible] தன்மையையே எதிர்நோக்க வேண்டி வரும். [illegible] இவர்கள் நிலைமையுணர்ந்து செயற்பட வேண்டிய நேரம் இது.

### காற்றாய் எங்கள் சுவாசங்களில் கலந்தவன்...

எங்கள் உரிமைக்கு
எங்கள் சுதந்திரத்துக்கு
அர்த்தம் தந்தவனே...
நீ
உருகி உருகி
விழிகள் சொருகிய
போதுதான்
அர்ப்பணிப்புகளின்
விளக்கம் தெரிந்தது...

திலீபா...
அகிம்சையின் அத்திவாரத்தை
மெச்சச் செய்த
ஆணிவேர் நீ...!

இமயமும் தலைகுனிந்தது
உன் தியாகத்தின்
உச்சி கண்டு...

காற்றாய்...
எங்கள் சுவாசங்களில்
கலந்தவனே...!
நீ
விட்டுச் சென்ற
காலடிகளில்
எங்கள் பாதங்கள்
தொடரும் உறுதியாய்
இது நிச்சயம்.

- கருணைரவி





# ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும் விடுதலைப் போர்ப்பண்பும்

இனப் பிரச்சினையின் அரசியல்யதார்த்தத்தை சிங்கள அரசாங்கங்கள் புரிந்து கொள்ள மறுப்பதைப்போலவே, விடுதலைப் போராட்டத்தின் இராணுவப் பண்பையும் கிரகித்துக் கொள்ள அவை பிடிவாதமாக மறுக்கின்றன.

சிங்களப்படைக்கும், புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைபெறும் போரை மதிப்பீடு செய்து பார்ப்பதற்காக இருபகுதிப்படைகளினதும் ஆள் எண்ணிக்கைகளையும் - ஆயுத வகைகளையும், தொகைகளையும் மட்டுமே சிங்கள அரசியல்வாதிகள் கணக்கிலெடுத்து - தவறான முடிவுகளை எடுக்கின்றனர். ஆனால் போரிடும் இருபகுதிப் படைகளினதும் போர்ப் பண்புகள் - இந்தப் பண்புகள் போரில், சிறுகச்சிறுக ஏற்படுத்தும் பாரிய இராணுவத் தாக்கங்களை சிங்களத் தலைவர்கள் ஏறெடுத்துப் பார்க்க விரும்புவதில்லை.

சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை அது சகல வசதிவாய்ப்புக்களையும் பெற்ற ஒரு அரசு, அதனிடம் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட ஒரு நிரந்தரப்படை உண்டு. சிங்களத்தின் இந்தப்படை, தனது நில எல்லைகளைக் கடந்து, தமிழர் தாயகத்தைக் கைப்பற்றி ஒரு ஆக்கிரமிப்புப் படையாக செயற்படுகின்றது.

நிலங்களைக் கைப்பற்றுவது - வளங்களை அபகரிப்பது - இனக்கொலைகளை நிகழ்த்துவது என்பவை ஆக்கிரமிப்பு அரசுகளின் முக்கிய பண்புகளாகும், இந்த ஆக்கிரமிப்புப் போர்ப் பண்புதான் சிங்களப் படைகளது போர்ச்செயற்பாட்டின் அடிநாதமாகும்.



ஒரு போரின் முடிவை, அது வெற்றியோ - தோல்வியோ விரைவாகக் காண்பது ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பின் பொது இயல்பாகும். ஏனெனில், இந்த வகைப் போர்ப்பண்புடைய படையிடம் படைபலம், அதாவது ஆள் ஆயுதவளம், அபரிதமாகக் காணப்படும். எனவே போரை நடாத்துவதில் வேகத்தைக் கடைப்பிடிப்பது இதற்கு இலகுவானதாக அமைந்துவிடும். ஆக்கிரமிப்புப் படைக்கு இருக்கின்ற சாதகமான இராணுவ அம்சம் இதுவாகும். எனினும், வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் போர் நடந்து முடிந்துவிட வேண்டும். அப்போதுதான் இந்த வேகம் வெற்றிக்கு வழிசமைக்கும். மாறாக நீண்டகாலத்திற்குப் போர் இழுபடுமாயின், ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய படைகள் அதற்கு ஈடுகொடுக்க முடியாது திணறத்தொடங்கும் இது ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும் படைக்குஉள்ள முக்கிய பலவீனமாகும். ஏனெனில் இத்தகைய போர்ப் பண்புடைய படையினருக்கு ஒரு நீதியான அரசியல் இலட்சியம் இருக்க மாட்டாது. இனவெறியால் உந்தப்பட்டு வேற்று இன மண்ணை ஆக்கிரமிக்க முயலும் ஆசை, ஒரு அரசியல் இலட்சியமாக அமைய முடியாது. எனவே, ஒரு எல்லைக்கு அப்பால், துன்பங்களைத் தொடராக எதிர்கொண்டு நெருக்கடிக்குள் நின்று நிலைத்துப் போர்புரியும் மன ஓர்மம் ஆக்கிரமிப்புப் படையினரிடம் இருக்கமாட்டாது. நாட்கள் செல்லச் செல்ல, தாங்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் படுகின்றோம் என்ற உணர்வு இவர்களிடம் மேலெழும்.

இவ்விதம் போர் இழுபடும்போது அதன் பக்க விளைவுகளான பல்வேறுவகைப்பட்ட நெருக்கடிகளுக்கு, வளப் பற்றாக்குறைகளுக்கு முகங்கொடுத்து தாக்குப்பிடிக்க முடியாமல் ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புடைய படைகள் தடுமாறும். போர்வீரர் மத்தியில் குழப்பமும் - விரக்தியும் - பயமும் குடிகொள்ளும். இவை ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பிற்கிருக்கின்ற பாதக அம்சங்களாகும். இந்தப் பண்பு சிங்களப் படைக்கும் பொருந்தும்.

இதேவேளை, ஆக்கிரமிப்பிற்கு எதிரான அல்லது இன ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் தமக்கே உரித்தான தனித்துவமான போர்ப்பண்பை தன்னகத்தே கொண்டுள்ளன. விடுதலைப் போர் என்பது மக்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் பங்கெடுக்கும் மக்கள்போர்தான். இந்த மக்கள் யுத்தத்தின் அடிப்படை இலட்சியம் தற்காப்பு. எனவே போரையும் தம்மையும் பிரித்துப்பார்க்க முடியாத அளவுக்கு ஒருபுறச் சூழல் அவர்களுக்கு இருக்கும். சுதந்திரம் - பாதுகாப்பு - கௌரவம் என்ற விடுதலை இலட்சியங்கள் அவர்களிடம் ஆழவேர் கொண்டிருக்கும். தற்காப்பு யுத்தம் அல்லது ஒரு இனத்தின் வாழ்விற்கான போர் என்ற வகையில் விடுதலைப் போராளிகளிடம் அதிஉயர் அர்ப்பணிப்பு உணர்வும் - அபாரசாதனைகள் படைக்கும் உறுதியும் இருக்கும். அத்துடன், அனைத்தையும் தன் ஆளுமையின் கீழ் நெறிப்படுத்தும் தன்மையும் இலட்சிய உறுதியும் எதற்கும் சளைக்காத பண்பும் கொண்ட தலைமையை விடுதலைப் போராட்டம் பெற்றிருக்கும்.

இவை காரணமாக போரின் இறுதிவெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கும் வீரர்களின் போர் உறுதி, அவர்களின் போர்த்திறன் - தாக்குப்பிடிக்கும் தன்மை - திறமையான தலைமை என்பவற்றில் விடுதலைப் போர்ப்பண்பைக்கொண்ட படையே மேன்நிலையில் இருக்கும். இந்த விடுதலைப் போர்ப்பண்புதான் புலிகள் இயக்கத்தினது போராட்டச் செயற்பாட்டின் மையமாகும். புலிகளின் பலம் இந்த விடுதலைப் போர்ப்பண்பில் ஆழவேர்விட்டுள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டம் இறுதிவெற்றிபெற நீண்டகாலம் எடுக்கும் ஏனெனில் எதிரி அரசின் ஆக்கிரமிப்புப் படையைப்போலல்லாது விடுதலைச் சேனை தனது ஆட்தொகையை அதன் ஆயுதவளத்தை - சண்டைத்திறனை அரிவரியிலிருந்து தொடங்கி பல்வேறு தடைகள் பின்னடைவுகளைத்தாண்டி படிப்படியாக முழுமை அடைய வேண்டும். இதனால் நீண்டகாலப்போர் என்பது விடுதலைப் போர்ப்பண்பின் கருவிலேயே கலந்துள்ளது. ஆகவே, காலம் கனியும்வரை அதிககாலத்திற்குப் போரை உயிர்த்துடிப்புடன் நகர்த்திச்செல்லும் விசேட சக்தி விடுதலைப் போர்ப்பண்பிற்குண்டு. அத்துடன் நீண்டகாலப் போரின் எதிர்விளைவுகளான பல்வேறு நெருக்கடிகள் - வளப்பற்றாக்குறைகள் என்பன விடுதலைப் போர்ப்பண்புடன் இசைவாக்கம் கொண்டதாக இருக்கும். அதாவது, தாக்குப்பிடித்தல் என்பது விடுதலைப் போர்ப்பண்பின் கூடப்பிறந்த குணம். நீண்ட காலப் போரில் வெற்றி என்ற மந்திரம், இந்த தாக்குப் பிடிக்கும் சக்திக்குள்ளேதான் குடிகொண்டுள்ளது. இத்தகைய போர்ப்பண்புகள் ஆக்கிரமிப்புப் படைக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும். தாக்குப்பிடித்து முன்னேறும் இந்த விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தவரையில், புலிகள் இயக்கம் உலகின் மிகச் சிறந்த உதாரணமாக இன்று விளங்குகின்றது.

இதேவேளை, ஆக்கிரமிப்புப் படைகளைப் பொறுத்த வகையில், நிலங்களைக் கைப்பற்றல் என்ற இராணுவ விடயமே வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. இதன் காரணமாக நிலங்களை அதிகளவில் கைப்பற்றுவதிலேயே, அவை அதிக கவனத்தைச் செலுத்தும். அதனுடைய இராணுவ பலம் காரணமாக உடனடியாக அது சாத்தியமானதாகவும் இருக்கும். ஆகவே ஒரு விடுதலை இயக்கத்திற்கு எதிரான போரில் தான்வெல்வது போன்றதொரு தோற்றப்பாட்டை ஆக்கிரமிப்புப் படைகள் அடிக்கடி தோற்றுவிக்கும் சாதாரண கண்களுக்கு இது வெற்றிபோலவே தென்படும். சிங்களப் படையின் தற்போதைய வெற்றித் தோற்றத்திற்கு இந்தப் போர்ப்பண்பு வேறுபாடு புரியாமை முக்கிய காரணமாகும்.

விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தவரையில், எதிரியின் படைகளை சதா சண்டையிடுவதன் மூலம் இழப்புக்களை ஏற்படுத்தி போரில் வெல்ல முடியாது என்ற மனச்சலிப்பை உண்டுபண்ணி எதிர்ப்படையை செயலிழக்கச் செய்து மீளமுடியாத நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு நிலங்களை மீட்டெடுப்பதுதான் வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. எனவே, ஒரு விடுதலைச் சேனையானது தேவையான ஆட்பலத்தையும் - போதியளவு மரபுப் போர் ஆயுதங்களையும் பெறும் வரையிலும் - அத்துடன் எதிர்ப்படை தளர்வடையும் வரையும் நிலத்தைக் கைப்பற்றி வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த விரும்பாது.

அதிஉயர் பலத்தை திரட்டிக்கொண்டு ஆக்கிரமிப்புப் போரை நடத்திச் சென்ற பல இராணுவ வல்லரசுகள் விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக் கொண்ட விடுதலை இயக்கங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் படைகளை விலக்கிக் கொண்ட போர்வரலாறுகள் பூமியில் நிறைய உண்டு.

ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பை இயங்குவிதியாகக் கொண்டிருந்த அதிசக்திவாய்ந்த அமெரிக்கப்படைகள் விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக் கொண்டிருந்த வியட்னாம் போராளிகளிடம், அவமானமாகத் தோல்விகளைத் தழுவியிருந்தன.

இந்தவகையில், இப்போது குறுகிய காலப் போரில் சாதக அம்சங்களைக் கொண்ட ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புடைய சிறீலங்காப் படைகளும் நீண்டகாலப் போரின் சாதக அம்சங்களைக்கொண்ட விடுதலைப் போர்ப்பண்புடைய புலிப்படையும் மிக உக்கிரமான போரை நடத்துகின்றன. போர் தொடர்ந்து நடைபெறத்தான் போகின்றது. சிங்களப்படை சோர்வடைந்து தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற்றப்படத்தான் போகின்றது.

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

# கிழக்குத் தீமோருக்குள்ள சுயநிர்ணய உரிமை தமிழீழ மக்களுக்கும் உண்டு

**– கரன்**




1975 போர்த்துக்கல் காலனித்துவம் விலகியது முதல் இந்தோனேசியாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்குத்தீமோர் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வந்தனர். அன்று முதல் இன்று வரை



200000-க்கு மேற்பட்ட மக்களைக் கொன்றழித்த இந்தோனேசிய ஆக்கிரமிப்பு அரசாங்கம் கிழக்குத்தீமோர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க மறுத்து வந்தது. இதனை சென்ற மாதம் 30-ம் நாள் திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் சபையினால் கிழக்குத்தீமோரில் நடாத்தப்பட்ட குடியொப்ப முடிவு மாற்றியமைத்துள்ளது. 78.5 வீதமான கிழக்குத்தீமோர் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் தமது சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து தங்கள் நாட்டை தாங்களே ஆள்வதற்கு முடிவு செய்துள்ளமை கிழக்குத் தீமோரின் விடுதலையை உறுதிப்படுத்தியுள்ளது. கிழக்குத்தீமோர் மக்களுக்கு, சுயநிர்ணய உரிமைக்காக 1972 முதல் போராடி வரும் தமிழீழ மக்கள் தங்கள் மகிழ்ச்சியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றனர். ஆயினும் இந்தோனேசிய ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் படைகள் கிழக்குத்தீமோரின் உட்கட்டுமானங்களையும் மக்களையும் இயலுமான அளவுக்கு அழித்து விட்டு கடை கட்டுவதற்கான முயற்சிகளை வேகப்படுத்தியுள்ளதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. எந்த ஆக்கிரமிப்பாளனும் சுயநிர்ணய உரிமையை ஏற்கமறுத்து மக்களையும் அவர்களின் தேசத்தின் உட்கட்டுமானங்களையும் அழிப்பதையே தனது அரசியல் இலக்காக கொண்டு இயங்குவான் என்பதை கிழக்குத் தீமோரின் இந்தோனேசிய அரசாங்கத்தின் செயல்கள் மேலும் தெளிவு படுத்தி உள்ளன.

இந்நேரத்தில் சுயநிர்ணய உரிமைக்காக 1972 முதல் போராடி வரும் தமிழீழ மக்கள் தமக்கு சொல்லொணா கொடுமைகளை செய்துவரும் சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் இனஅழிப்பு ஆட்சியில் இருந்து தாம் விடுதலை பெறுவதற்கு அனுபவித்து வரும் துன்பங்களை உலகு எப்பொழுது கண்திறந்து பார்க்கப் போகின்றது என்ற நியாயமான கேள்வியை எழுப்பி நிற்கின்றனர்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினை காலனித்துவம் தோற்றுவித்த பிரச்சினை ஐ.நா. வின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனங்களுக்கு அமைவான பிரச்சினை

தமிழீழ மக்களின் நவீன அரசியல் வரலாறும் போர்த்துக்கல்லின் காலனித்துவத்துடனேயே ஆரம்பமாகியது. போர்த்துக்கல் இலங்கைத் தீவில் தாழ்ந்தநிலச் சிங்களப் பிரதேசத்தில் 1505-இல் கால்வைத்தபோதிலும் 1621 வரை 116 ஆண்டுகளுக்கு இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கினை உள்ளடக்கிய தமிழ் அரசான யாழ்ப்பாண அரசை வெற்றிகொள்ள முடியவில்லை. 17-ம் நூற்றாண்டில் தமிழர்களின் யாழ்ப்பாண அரசும் சிங்களவர்களின் கண்டி அரசும் போர்த்துக்கேயர்களால் வெல்லப்பட முடியாத தனியரசுகளாக இலங்கையில் இலங்கின. ஆயினும் 1619-ல் சங்கிலி குமாரனை சிறைப்படுத்தி 1621-ல் அவனுக்கு மரணதண்டனையை நிறைவேற்றியதன் மூலம் யாழ்ப்பாண தமிழரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியுற்றது. யாழ்ப்பாண அரசை 35 ஆண்டுகள் போர்த்துக்கேயர்கள் ஆட்சி செய்த நிலையில் டச்சுக்காரரினால் இலங்கையின் போர்த்துக்கேய ஆட்சி கைப்பற்றப்பட்டது. டச்சுக்காரர்கள் தமிழ் அரசினுடைய எல்லைகளை அனுமதித்ததுடன் யாழ்ப்பாண தமிழர்களிடை நிலவிய சட்டங்களை தேச வழமைச் சட்டங்கள் என்ற பெயரில் தமது உரோமைச் சட்டங்களுடன் நாட்டின் சட்டங்களாக தொடருவதை அனுமதித்தனர். 1796 முதல் இலங்கைத் தீவில் தமது ஆட்சியை ஆரம்பித்த பிரித்தானியர்கள் ஆறு ஆண்டுகளுக்கு சென்னையில் இருந்து இலங்கைத்தீவை ஆண்டனர். ஒரே காசைக் கூட பயன்படுத்தினர். இது ஐரோப்பிய காலனித்துவவாதிகள் தமிழர்களை தென்னிந்தியாவின் சக்தி மிக்க தேச இனமாக கருதி 'மலபார்' என்ற பெயரில் அவர்களின் துணையுடனேயே சர்வதேச வர்த்தகத்தை நடாத்தலாம் எனக் கொண்டிருந்த பொருளாதார நோக்கினை அடியொற்றி அமைந்த ஒன்று. ஆயினும் 1802-ல் தமிழர் பிரதேசங்களையும் தாழ்ந்த நில சிங்களப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பிரித்தானிய முடியாட்சி அமைக்கப்பட்டது. 1815-ல் கண்டிச் சிங்கள அரசினைக் கைப்பற்றிய பிரித்தானியா வன்னித் தமிழ் அரசின் எதிர்ப்பினை 1832 வரை தொடர்ந்து எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இறுதியில் வன்னித் தமிழ் அரசனான பண்டாரவன்னியனை 1832-ல் கைப்பற்றிய பின்னரே 1833-ல் இலங்கைத்தீவை பிரித்தானியா ஒரே நாடாக பிரகடனப்படுத்தியது. இவ்வாறு இலங்கைத்தீவை அதனுடைய அரசுக்களின் எல்லைகளை ஒன்று சேர்த்து ஒரே நாடாகப் பிரகடனப்படுத்தி அதற்கு ஒரு சட்டவாக்க சபையினைத் தோற்றுவித்த பிரித்தானியா னிய அரசாங்கம் தமிழ் சிங்கள மக்களின் தனியரசுகளின் வரலாற்றுத் தன்மையினைக் கருதாது 1931-ல் சனத்தொகை ரீதியான வாக்குரிமையினை அமுல்படுத்தியதன் காரணமாக தமிழ் மக்கள் தங்கள் சொந்த அரசுடன் விளங்கிய இலங்கைத்தீவில் சிறுபான்மையினம் என்னும் அரசியல் அடைமொழிக்குள் தள்ளப்பட்டனர். இந்த தவறான அடைமொழியின் பின்னணியில் விடயங்களை எடுத்து நோக்கி பிரித்தானியா இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் வழங்கியதன் விளைவாகவே சிங்கள நவகாலனித்துவம் 1948-ல் தோற்றம் பெற்றது. ஆதலால் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை என்பது முற்று முழுதான காலனித்துவப் பிரச்சினை. தாங்கள் இலங்கைத்தீவுக்கு வழங்கும் சுதந்திரம் காலனித்துவப் பிரச்சினையாக மாறும் என்பதை பிரித்தானியா தெளிவாக உணர்ந்திருந்ததினாலேயே அதனால் இயற்றப்பட்ட சோல்பரி அரசியல் அமைப்பில் 29 (2)-வது பிரிவை சிறுபான்மையினங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசியல் அமைப்புச் சட்டமாகச் சேர்த்தனர். இந்த அரசியல் அமைப்பு உத்தரவாத்தை மீறி சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் உருவாக்கிய சிறீலங்கா குடியரசு என்ற பௌத்த சிங்களக் குடியரசை தமிழர்



தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பறங்கியர்கள் எனப்பட்ட இலங்கை வாழ் ஆங்கிலேயர்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமித்தனர். இது தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவின் தேச இனங்களாக பிரித்தனியாவாலும் ஏற்கப்பட்டமைக்கு தெளிவான சான்றாக உள்ளது. ஆயினும் காலனித்துவ பிரித்தா கள் தங்கள் மீது திணிக்கப்பட்ட சட்ட விரோத அரசாக கருதி அதனை நிராகரித்து தமது இறைமை தம்மிடம் மீண்டு விட்டதாக பிரகடனப்படுத்தி தமது சுயநிர்ணய உரிமை கொண்டு தமது தமிழீழத் தாயகத்தின் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக இயங்குவதற்கான உறுப்பினர்க

ளையே 1977 தேர்தல் மூலம் தெரிவு செய்தனர். இந்த தமிழீழத் தாயகத்தை ஜனநாயக வழிகளினால் மீள நிறுவ இயலாவிடில் போராட்டத்தின் மூலம் நிறுவுவர் எனவும் அவர்கள் சிங்கள மக்களுக்கும் உலகிற்கும் தெளிவாக எடுத்துரைத்தனர். இதுவே இன்று வரை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் தொடரும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம். எனவே காலனித்துவத்தினால் உருவாக்கப்பட்ட பிரச்சினை ஒன்று இன்று வரை தீர்க்கப்படாத நிலையில் தொடர்கிறது. சிறீலங்கா தமிழீழ மக்களைப் பொறுத்தவரை அந்நிய அரசு. ஏனவே 1960களில் ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட சுயநிர்ணய உரிமை பிரகடனச் சட்டங்கள் மரபுகளுக்கு ஏற்ப தமிழீழ மக்களின் பிரச்சினையும் சர்வதேச பிரச்சினையாக எடுத்து நோக்கப்படல் வேண்டும். 1976-ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சட்டங்களுக்கு ஏற்ப தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையினை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தேசிய விடுதலை இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும்.

### பல்லின சமுதாய அமைப்பைச் சிதைத்தவர்களே பல்லின நாடு இலங்கையெனப் பல்லவி பாடுகின்றனர்

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களுமே பூர்வீக குடிகளாக இருந்து வருகின்றனர். இந்த இரண்டு தேசியங்களுமே காலனித்துவ ஆட்சிகள் ஏற்பட்ட பொழுது இலங்கைத்தீவில் தனியரசுகளைக் கொண்டிருந்தனர். ஆயினும் வர்த்தக கைத்தொழில் ஆக்கங்களால் உலகு விரிவுற்ற பொழுது இலங்கைத்தீவிலும் பிற இனத்தவர்கள் வாழ்ந்து இன்று இலங்கையையே தங்கள் தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர். இவ்வகையில் முஸ்லீம் மக்களும் மலையகத் தமிழர்களும் முக்கியமானவர்கள். தமிழர்களுடையதும் சிங்களவர்களுடையதும் தாயக உரிமைகள் ஏற்கப்பட்ட நிலையில் இலங்கையில் வாழும் அனைத்து மக்களதும் பாதுகாப்பு அரசியல் பொருளாதார சமூக உரிமைகளை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் சிங்கள தேசியங்களுக்கு உண்டு என்பதை உண்மையான விடுதலை விரும்பிகள் யாருமே மறுக்க மாட்டார்கள். ஆனால் சிங்கள சிறீலங்கா தமிழர்களின் தாயக மீட்புக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க அந்த இலக்கை எய்துவதற்கு முன்பே முஸ்லீம் மக்களதும் மலையக மக்களதும் பிரச்சினைகளை பெரிது படுத்தி இலங்கைத் தீவை பல்லின மக்கள் சமுதாயத்தை கொண்ட நாடாகவும் இதில் தமிழர்கள் தனிநாடமைத்தால் மற்றைய சமுதாயங்கள் பாதிக்கப்படலாம் எனவும் முதலைக் கண்ணீர் வடித்து வருகின்றது. உண்மையில் ஒரு காலத்தில் இலங்கை பல்லின சமுதாய அமைப்பாக மாறக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்ட நேரங்களில் எல்லாம் முஸ்லீம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் எதிரான அனைத்துப் பொருளாதார அரசியல் சமூக ஒடுக்கு முறைகளை எல்லாம் கையாண்டு இலங்கைத் தீவை தனிச் சிங்கள பௌத்த குடியரசாக மாற்றியவர்கள் இந்த சிங்கள பௌத்த பேரினவாதிகளே. அந்நேரத்தில் இலங்கைத் தமிழர்களே இந்த முஸ்லீம் மலையக மக்களின் பாதிப்புக்களை உணர்ந்து குரல் கொடுத்தவர்கள். தமிழ்க் காங்கிரஸ் இரண்டு படுவதற்கும் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் தன் செல்வாக்கை இழப்பதற்கும் மலையக மக்களின் குடியுரிமைப் பறிப்பில் அக்கட்சி காட்டிய அலட்சியமே முக்கிய காரணமாக அமைந்தது. முஸ்லீம் மக்கள் தமிழ் பிரதேசங்களில் பிரதிநிதிகளாக பாரளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டமை தமிழ் முஸ்லீம் மக்களிடை நிலவிய நல்லுறவுக்கு சிறந்த உதாரணங்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான மாவீரர் கேர்ணல் கிட்டு அவர்களுக்கும் முஸ்லீம் தலைவர்களில் ஒருவரான அல்ஹாஜ் பதியுதீன் முகமத்திற்கும் இடை தமிழ்நாட்டில் நடந்த பேச்சுக்கள் தமிழ் முஸ்லீம் மக்களின் நல்லுறவுக்கு மற்றொரு உதாரணம். இவ்வாறாக தமிழீழ மக்கள் தமது விடுதலையை மட்டும் நேசிக்காது தமிழீழத் தாயகத்தில் வாழும் எல்லா இன மக்களதும் பாதுகாப்பையும் வளர்ச்சிகளையும் உரிமைகளையும் குறித்து நீதியான நேர்மையான திட்டங்களைத் தம்மகத்தே கொண்டே செயற்பட்டு வருகின்றனர். ஆனால் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களே முஸ்லீம் மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளை நசுக்கி இலங்கையில் பல்லின சமுதாயம் உருவாவதை தடுத்தனர் - தடுக்கின்றனர். உண்மையில் தமிழீழ மக்களுக்கு விடுதலை கிடைப்பதன் பின்னர் தோன்றக் கூடிய சூழ்நிலைகளே முஸ்லீம் மலையக மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் நீதியான நேர்மையான பாதுகாப்பான பொருளாதார சுபீட்சங்கள் நிறைந்த எதிர்காலத்தை தோற்றுவிக்கும் எனப் பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளில் சுட்டிக் காட்டி வருகின்றனர். இந்நிலையில் சிறீலங்கா ஒரு பல்லின சமுதாய அமைப்பு உள்ள நாடென்று கூறி தமிழீழத் தாயகம் மீள அமைந்து உள்ளமையை மறுத்து சிறீலங்கா செய்து வரும் பரப்புரைகள் சிங்கள பௌத்த பேரினவாதிகள் இலங்கைத்தீவை தனிச் சிங்கள பௌத்த குடியரசாகத் தக்க வைத்துக் கொள்ள எடுக்கும் பகீரதப்பிரயத்தனமாகும். ஆயினும் இந்த போலியான முதலைக் கண்ணீரை இலங்கைத்தீவின் நவீன கால வரலாற்றைத் தெரிந்த எவரும் இலகுவாக இனங்கண்டு கொள்வர்.




### சிங்களப் பெரும்பான்மை அரசுக்கு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றலில்லை சர்வதேசமே உதவ வேண்டும்

சிறீலங்கா அரசாங்கத்திற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்த எந்த அக்கறையுமில்லை. மாறாக தமிழ் மக்களை இனஅழிப்பு இனத்துன்புறுத்தல் செய்வதன் மூலம் தமிழர் தாயகத்தில் தமது இறைமையை நிலைநாட்டி அதனை தனது தேசத்தின் ஒரு பகுதியாக கபளீகரம் செய்ய வேண்டும் என்ற நோக்கும் போக்குமே உள்ளது. இந்நிலையில் தனது குடிமக்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்தத் தவறும் அரசுகளின் இறைமையை மீறி பாதிக்கப்படும் மக்கள் சார்பாக தலையிட்டு அவர்களுக்கு உதவ வேண்டிய பொறுப்பும் கடமையும் ஐக்கிய நாடுகள் சபைக்கு சட்டப்படி உண்டு. இதனை ஐக்கிய நாடுகள் சபை உடன் கவனத்தில் எடுத்து தமிழீழ மக்களின் உயிருக்கும் உடலுக்கும் தேசத்தின் உட்கட்டுமானங்களுக்கும் தினம் தினம் சேதங்களை விளைத்து வரும் சிறீலங்காப் படைகளை தமிழர் தாயகத்தில் நின்று வெளியேற உதவ வேண்டும். இதன் மூலம் தோன்றக் கூடிய சூழ்நிலைகளை பலப்படுத்தி அரசியல் தீர்வின் மூலம் தமிழீழ மக்கள் தமது தாயகத்தில் பாதுகாப்பான அமைதி வாழ்வை தொடர ஐக்கிய நாடுகள் சபை ஆவனசெய்தல் வேண்டும். அதுவரை தினம் தினம் சிறீலங்காவின் பொருளாதார உணவு மருந்து தடைகளால் சத்தற்ற சொத்தற்ற திக்கற்ற சமுதாயமாக சிறீலங்காவால் மாற்றப்பட்டு வரும் தமிழீழ மக்களை 'அதீத மனிதாய உதவிக்கு உரிய மக்களாக' கருதி மனிதாய உதவிகளை தமிழர் புனர் வாழ்வு கழகத்தின் ஊடாக உடன் செய்தல் ஐக்கிய நாடுகள் சபையின் தலையாய கடமையாக உள்ளது. ●●

## நீங்கள் எமது இனத்தின் ஒரு அங்கத்தவர்

### துரோகச்செயல்களைக் கைவிடக்கோரி துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள்

துரோகச்செயல்களைக் கைவிட்டு சொந்த வாழ்வில் ஈடுபடுமாறும், அல்லது தமது இயக்கத்தில் வந்து இணைந்து கொள்ளுமாறும் தெரிவித்து விடுதலைப் புலிகள் சிறீலங்காப் படைகளுடன் இணைந்து செயற்படும் தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்குத் துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துரோகிகளின் தேசத்துரோக நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது என்ற தலைப்பில் இந்தத் துண்டுப்பிரசுரம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினால் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**நீங்கள் எமது இனத்தின் ஒரு அங்கத்தவர் என்ற வகையிலும் இளைஞர்கள் என்ற வகையிலும் உங்களை வரவேற்க எமது தலைவர் தயாராக இருக்கின்றார்.**

இத்துண்டுப்பிரசுரங்கள் இவ் அமைப்புக்களின் அலுவலகங்கள் உள்ளூராட்சி அமைப்புக்கள் என்பனவற்றுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

'பேரினவாத சக்திகளுடன் இணைந்து தேசவிரோத செயல்களில் ஈடுபட்டு வரும் இளைஞர்களாகிய நீங்கள் தலைவர்களின் ஆசைவார்த்தைகளுக்கும், சுயநலத்திற்காகவும் பலிக்கடாவாக்கப்பட்டு வருகின்றீர்கள். விடுதலைப்புலிகள் காற்றுப்புகக்கூடிய இடமெல்லாம் புகக் கூடியவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். எமது பலத்தையோ சாதனைகளையோ குறைவாக எடைபோட்டு உங்களை நீங்கள் அழித்துக் கொள்ளவேண்டாம். எனவே நீங்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கும், நீங்கள் பெற்றோருடன் இணைந்து வாழ்வதற்கும் நாங்கள் அனுமதி வழங்குகின்றோம். உங்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குகின்றோம். நீங்கள் எமது இனத்தின் ஒரு அங்கத்தவர் என்ற வகையிலும் இளைஞர்கள் என்ற வகையிலும் உங்களை வரவேற்க எமது தலைவர் தயாராக இருக்கின்றார். எனவே இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் வீணாக்கிக்கொள்ள வேண்டாம். உங்கள் துரோகச் செயல்களைக் கைவிட்டு மானத்துடன் தமிழனாக வாழப்போகின்றீர்களா அல்லது மக்கள் விரோதச்செயல்களில் ஈடுபட்டு அநியாயமாக உங்களை நீங்களே அழித்துக்கொள்ளப்போகின்றீர்களா? என்பதை நீங்களே! முடிவெடுத்துக்கொள்ளுங்கள் என்று இந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திலீபனின் கனவு



குளிர்ந்த நீரோடை போன்ற மனிதனின் நினைவு என்றென்றும் எம்முள் பிரமிப்பாகவே இருக்கிறது. அந்த மாமனிதனின் வாழ்க்கை மனக்கண்களில் நிறைய, நிறைய நாமும் புது மனிதர்களாக நிமிரமுடியும். ஒரு தென்றலைப் போலவே நிதமும் மண்ணில் வீசக் கூடியவனாக திலீபன் வாழ்ந்திருக்கிறான். விடுதலை, மானுடம், சுதந்திரம், தியாகம் என வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் அவன் சுடர்கின்றான். கோடைக் கனவில், நிலவின் தன்மையில், அலைகடலில், விண்ணில், வெளியில் எங்குமே நிறைந்திருக்கக் கூடியவனாக அவன் வாழ்ந்தான். ஒரு விடுதலை வீரனுக்கு, தியாக சீலனுக்கு இவை சாத்தியமான மிக அன்மித்த விடயங்களாகவே இருந்தன.

எமது மண்ணின் விடுதலை பற்றிய உன்னதமான கனவை நனவாக்க உழைப்பது, சிந்திப்பது, எழுதுவது, பாடுவது, பேசுவது என்ற அவனது பணிகளுக்கு அப்பால் அவன் ஒரு போராளியாகவும் இருந்தான். போர்க்களத்தில் திலீபன் எதிரியோடு மோதும்போது ஒரு வேலை செய்வது போல ஒரு கடமையாளனாக, மிகவும் எளிமையாக, நிதானமாக நின்று போராடுவான். போராட்டக் களத்தில் எதற்கும் அஞ்சாத் தீரனாக இருந்த அவனே புதியதோர் களத்தையும் திறந்தான். அதனால்த்தான் அவனை மக்கள் மெய்சிலிர்க்க நினைவுகூர்கிறார்கள்.

**தமிழினத்தை தலைநிமிரவைத்த தங்கமே**
**தலைசாய்ந்து போனதுமேன் திலீபனே**
**எமை உலக அரங்கில் பேசவைத்தாய் – நீ**
**இன்றிங்கே மௌனமானாய்**
**எம்கரங்கள் உயர்வதற்காய்**
**உன்கரங்கள் எழுந்தடா திலீபா என்று**

மழலைகளாலும், சிறுவர்களாலும், இளைஞர்களாலும், தாய்மார்களாலும் திலீபன் உறவுமுறைகூறி அழைக்கப்படுபவனாக இருந்தான்.

திலீபன் மாமா என்றும், திலீபன் அண்ணா என்றும், எங்கட தம்பி என்றும், எங்கடை பிள்ளை என்றும் அவனை மக்கள் அன்பொழுக அழைத்தார்கள். பாசமழை பொழிந்தார்கள். அவனது பாசமழைப் பொழிவில் அவர்களும் நனைந்தார்கள். சின்னஞ்சிறார்களை மதித்து பழகுவதற்குரிய உயரிய பக்குவமும் எளிமையும் அவனுக்கு இருந்தது. அவர்களைத் திலீபன் தன் உயிரிலும் மேலாய் நேசித்தான்.

எங்கட மண்ணின் குழந்தைகள் என தூக்கிவாரித் தன் தோள்களில் காவித்திரிந்தான் அடிமை வாழ்வினை வெறுக்கின்ற ஒரு சுதந்திர வீரனுக்குத்தான் அத்தகைய தாய்மைப் பண்பு மிளிரும். அது அவனுள் பன்மடங்காய் மிளிர்ந்தது.



எமது தாயகமண் அன்னிய ஆக்கிரமிப்புக்களால் அதன் ஆன்மாவை இழந்துவிட்டதைக்கண்டு கண்கலங்கி அழுதவன் திலீபன். அன்னிய ஆக்கிரமிப்புச் சூழலில் எமது மண் சிக்குண்டு முகத்தை, மொழியை, வாழ்வை, வளத்தை, அரசை, பண்பாட்டை, கலையை, நிலத்தை இழந்து தவித்தது. அந்நிய ஆக்கிரமிப்புச் சின்னங்களும், அதன் பதிவுகளும் அவன் மனதில் என்றுமே அழியாத் துயரப் பதிவுகளாகி இருந்தன. அதுவே அவனுக்குத் தீராக் கோபத்தை மூட்டியது. அந்தத் தீராக் கோபமே அவனை ஓயாத விடுதலைச் செயற்பாட்டாளனாக மாற்றியது.

யாழ். கோட்டையின் முன் நின்று திலீபன் என்று இந்தக்கோட்டையில் எமது புலிக்கொடி பறக்கிறதோ அன்று நாம் விடுதலையை அனுபவித்தவர்களாக அதை நெருங்கிவிட்டவர்களாக இருப்போம் என்று பொருள்படப் பேசினான். அடிமைகளாக வாழ்வதிலும் சாவது மேல் என்பான்.

சிங்கள அரச பயங்கரவாதத்தால் தமிழ் மக்கள் தாங்கொணாத் துன்பங்களை அநுபவித்தார்கள். எப்பொழுதும் அச்சமும் அழுகையும், பயங்கரமும் கோலோச்சியது. மண்ணில் அஞ்சியஞ்சி சொந்த மண்ணிலேயே தமிழ்மக்கள் அடிமைகளாக வாழ நேர்ந்தது. அதையெல்லாம் திலீபன் தான் நேசித்த மண்ணின், தான் நேசித்த மக்களின் துன்பங்கண்டு நெஞ்சங்கலங்கினான்.

மக்கள் எல்லோரும் எழவேண்டும் மக்கள் அத்தகைய கொடுங்கோன்மைக்கு எதிராக எழுந்து சாவுமணி அடிக்க வேண்டும் எனக் கூறினான். அத்தகையதொரு மக்கள் போராட்டம் மலர வேண்டும். மக்களே போராட்டத்தின் மாபெரும் சக்தி அந்த சக்தி எழவேண்டும். போராளியாய்மாறி போராளியாய்ப் புறப்பட்டு அடிமைச் சங்கிலிகளை அறுத்தெறியவேண்டும். அத்தகைய உரிய மாற்றத்திற்கான விதையைத் திலீபன் மண்ணுள் ஊன்றினான். மண்ணில் மக்கள் போராட்டம் மலர வேண்டும் என்பதற்காய் விடுதலைப் புலிகளுடன் இணைந்து தானும் ஒருவனாகி செந்தீ வளர்த்தினான்.

தியாக தீபம் எனப்போற்றப்படுகின்ற

## நீங்கள் தமிழீழம் அமைப்பதை நான் மேலே இருந்து பார்ப்பேன்

**அணு அணுவாகப் பிரிந்து கொண்டிருக்கும் திலீபனின் உயிரை பார்க்கப் பொறுக்காத, நான்கு நாட்கள் பாரதத்தை நம்பி நம்பிக்கையை இழந்த மக்கள், ஆற்றமுடியாத இந்தச்சாவில் இருந்து விடுபடுமாறு கதறி அழுது மேடையில் பேசினார்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் இலட்சியப் பற்று நிறைந்த திலீபன் அவர்கள் மக்கள் முன் தனது நாலாம் உரையை ஆற்றினார். இதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் அமைந்துவிட்டது.**




எம் உயிரிலும் மேலான தமிழீழ மக்களே!

எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால் நான் நான் பேச வேண்டும் என நினைக்கிறேன். இது எமது இலட்சியப் போராட்டம். இதை யாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள். எனது முடிவு எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில் நான் முதல்நாள் உண்ணாவிரதம் இருந்ததைவிட அதற்கு அடுத்த அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன். இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கின்றேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும் நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகிவிட்டதும் தான். அதற்காகத்தான் அந்த ஒன்றே போதும் நான் சாகலாம். 650 பேருடன் 651வதாக நான் போகிறேன். என்னைப்பற்றி யாரும் வீணாக கவலைப்படாதீர்கள், அலட்டிக் கொள்ளாதீர்கள் ஆனால் புரட்சிக்குத் தயாராகுங்கள். எனது அவயங்கள் செயலிழப்பதை நான் உணர்கிறேன். இனி ஒரு மனிதனாக என்னால் வாழமுடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே அது மட்டுமல்ல, இது ஒரு இலட்சியப் போராட்டம். எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு ஐந்து பேர் சாவதால் எதுவித தீங்கும் ஏற்படாது. மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும். நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்று தடவையும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகிறேன். அதற்காகத்தான் சாகிறேன். எனது சாவைப் புரிந்து கொள்ளுங்கள். அது தான் இந்த மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன். எனவே தயவுசெய்து இலட்சியத்தை கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பதுபோல் இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆளவேண்டும் என்ற ஆசையாலோ வாழவேண்டும் என்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை. எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கமும் அவ்வாறில்லை. தயவு செய்து மீண்டும் கேட்கிறேன். மன்றாட்டமாகக் கேட்கிறேன். என் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள் தயவு செய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்) பெரும் ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்து விட்டது. உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றையவிட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலைமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அமானுஷ்யமாகவும் பிரமிக்கவேபோ எனக்குத் தெரியாது. ஆனால், மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்துக்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாகவுள்ளேன் என்று. நேற்று என்னால் பேசமுடியவில்லை. ஆனால் இன்று (சிரிப்புடன்) தாராளமாகப் பேசமுடிகிறது. ஏனோ தெரியவில்லை எனவேதான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது நீங்கள் எங்கள் போராட்டத்திற்குத் தயாராகுங்கள். அதைத் தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நீங்கள் போராடுங்கள் நான் மேலே இருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதை பார்த்துக் கொண்டிருப்பேன். நாம் என்றும் உங்களை விட்டுப்போகமாட்டோம். எங்கள் உடல் மட்டும்தான் போகும். உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும். அதைமறந்து விடாதீர்கள். எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள் சகோதரிகள் வருவார்கள். அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள். அவர்களுக்கும் வழிவிடுங்கள். நான் ஏற்கனவே பல தோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனைய தோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். அவர்களையும் மறக்காதீர்கள். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர்களது இலட்சியம்தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல அவர்களது வாழ்வு முக்கியமல்ல, சாப்பாடோ தண்ணீரோ முக்கியமல்ல அவர்களது இலட்சியம்தான் முக்கியம். அதை நிலைநாட்டத்தான் என் தலைவரால் முதன் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இந்த அனுமதியைப் பெற்றேன். எனவே, எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவு செய்து நீங்கள் அலட்டிக்கொள்ளாதீர்கள். தயவுசெய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ தயவு செய்து பேச்சாளர் எவரும் இந்தக் கருத்துடன் மேடையில் பேச வேண்டாம். இது என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. நான் அதற்காக இங்கு வந்து இருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். உண்மையாகச் சொல்கிறேன். எனது மூளை ஒன்றுமே கிறுக்கவில்லை. (சிரிப்புடன்) ஒருவேளை மூளை மறுதாட்டமாகிப் போய்விட்டதோ எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து மன்னியுங்கள். நான் பேசுவதாக இருக்கவில்லை எனக்கு முன் பேசிய பேச்சாளர்களால்தான் பேச வேண்டி வந்தது. தயவு செய்து நீங்கள் இதைத் தவிர்த்து நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலேயே பேசுங்கள். நான் எந்த இலட்சியத்துக்காகச் சாகிறேனோ அந்த இலட்சியத்தை அடையக் கூடியவகையில், மக்களை எழுச்சியூட்டும் வகையில் தயவு செய்து பேசுங்கள். அதைத்தான் விரும்புகிறேன். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரிலும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

# நனவாகிறது



அளவிற்கு தன்னை உருக்கிய மகாத்மா அவன். போலிகளை இனங்காட்டல், விடுதலை விதைகளை விதைத்தல், பொய்மைகளைத் தகர்த்து மக்களுக்கு வெளிச்சத்தை, உண்மையை உணர்த்தல் என்பது அவனின் உழைப்பாக இருந்தது. மெய்மை நிறைந்த வாழ்வை விளங்கச் செய்ய அவன் அயராது உழைத்தான். சிறீலங்கா அரசை ஆட்டம் காண வைக்கின்ற அளவிற்கு எமது போராட்டம் தீவிரமுற்ற காலத்தில் சிங்கள அரசு செய்வதறியாது திகைத்தது. அந்த நேரத்தில் அது இந்தியாவை அமைதிப்படையின் போர்வையில் தமிழீழ மண்ணுக்கு இழுத்து வந்தது.

இந்தியாவே எங்களைக் காப்பாற்று என்கிற கோசமே சிங்கள அரசின் உள்ளார்ந்த கோசமாக இருந்தது. எனினும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவை இழுத்து வந்து ஒரு குத்துச்சண்டைக் களத்தை உருவாக்கி தமிழீழ விடுதலைப் போரைப் பலவீனப் படுத்தவே முயன்றார். அரசியல் சாணாக்கியம் மிகுந்ததாகக் கருதியே அந்த நகர்வை அவர் மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் உறுதிமிக்க, தியாகம் செறிந்த விடுதலைப் போராட்டத்தையும், இலட்சியப் பற்றுணர்வையும் கருத்தில் கொள்ளாத அவர்களின் நகர்வு அவருக்கு பலத்த தோல்வியையும், அவமானத்தையும் தேடிக்கொடுத்தது.

எந்த அளவு கோல்களாலும் அளவிட முடியாத விடுதலைப் போராற்றலின் முன் நரித்தனங்களும், போலி முகத்திரைகளும் கிளிந்து அம்மணமாகின. சிங்களத் தலைமைகளோ அவர்களது அரசியல் வாழ்க்கைக் காலத்தில் சந்தித்திராத போராற்றலை அரசியல் மதி நுட்பத்தைக் கண்டு கலங்கின. தமிழ்த் தலைவர்கள்தான் காலம் காலமாக சிங்கள அரசின் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு விட்டோமென கலங்கிய காலம் அன்றிருந்தது. இன்றோ சிங்களத் தலைவர்கள் எம்மை ஏமாற்றி விட்டார்கள் என அழுகின்றார்கள். நிலைமை மாறிவிட்டது. விடுதலைப் புலிகளின் உன்னதமான அந்த விடுதலைப் போரில் பல புதியபுதிய



அத்தியாயங்களை விடுதலைப் புலி வீரர்கள் எழுதி இருக்கிறார்கள். அத்தகையதொரு புதிய அத்தியாயத்தை திலீபன் இரத்தத்தால் எழுதினான்.

1987 ஆம் ஆண்டு இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்தான போதே அது எம்மைப் பலிகொள்ளும் என்றும், அது எமக்கு ஆபத்தானது என்றும், அது என்றும் எம்மை அரணை கொள்ளவே முனையும் என்றும் தீர்க்கமாக விடுதலைப் புலிகளின் தலைமை உணர்ந்திருந்தது.

திலீபன் அது ஒரு மாயமான் என நம்பினான். வேசம் தரித்துவந்து படுகுழியில் விழுத்த வல்ல அந்த மான் விரித்த வலைகளை அவன் கண்ணுற்றான். ஏகாதிபத்திய நலன்களை பேணும்முகமாக திட்டமிட்ட அவ் ஒப்பந்தம் தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுத்தரப்போவதே இல்லை என்பதை



உணர்ந்தான். இந்தியா அமைதி காக்கும் படையாக தமிழீழ மண்ணில் காலடி வைக்க தமிழர்களின் குருதி ஆறாய் ஓடியது. மக்கள் இந்தியா மோசம் புரிந்து விட்டதை எண்ணிக் கலங்கினார்கள்.

அமைதி காக்கும் படையென்று
இந்தியப்படை வந்தது.
அராஜகத்தை தமிழன் மீது கட்டவிழ்த்து
விட்டது.
இம்மியளவும் ஈழமதில்
அமைதிதரவில்லையடா.
இந்தியாவின் படையினாலே நடந்ததுதான்
அநீதியடா.

என மக்கள் பேசிக் கொண்டார்கள்.

சிறீலங்கா அரசு தன் கையாலாகாத்தனத்துக்கு இந்தியாவை இழுத்துவந்து அவமானச் சேற்றை பூசியது. இந்திய அமைதிகாக்கும் படை, அராஜகப் படையாக மாறியது. தமிழீழ மக்களின் இந் நிகழ்வு ஆறாத் தழும்பைப் பதித்தது.

திலீபன் வழக்காடினான் நல்லூரில் களம் இறங்கினான். தான் நேசித்த மக்களுக்காக உண்ணா நோன்பிருந்து போர் தொடுத்தான். உலக விடுதலைப் போராட்டங்களே கண்டிராத உன்னத ஆயுதத்தை கையிலெடுத்தான். இந்தியா உலகிற்கு அளித்த அகிம்சா தர்மத்தை இந்தியாவே காலால் உதைத்தது. திலீபனின் பட்டினிப் போர் தொடர்ந்தது. எமது வாழ்வுரிமையை, எமது பிறப்புரிமையான சுதந்திரத்தை, யாருக்கும் அடிமையில்லா வாழ்வை அவன் வேண்டிப் போராடினான். அவன் முன் தமிழீழ மக்கள் கூடிக் கதறிக் கதறி அழுதனர். நீரின்றி, அன்னமின்றி பன்னிரு நாட்கள் தவமிருந்தான்.

திலீபன் என்னும் தியாக தீபம் நல்லூர் வீதியில் உருகி, உருகி எரிந்துகொண்டிருந்தது. தான் நேசித்த மக்களின் உயரிய விடுதலை வாழ்விற்காக தன் தலை சாய்த்து தரையில் படுத்தவன் திலீபன்.

உயிரே! ஒளியே! உன்னதனே, வீரனே, திலீபனே, தியாகமே என்று மக்கள் கூவிக் கூவி அழைத்து அழுதார்கள். விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவனின் உன்னதமான தியாக வரலாறு உலக நாடுகளால் உற்றுநோக்கப்பட்டது. இது எவ்வாறு நிகழ்கிறது. இந்த நெருப்பு எங்கிருந்து எழுகிறது. இந்த வல்லமையின் தாய்மை எங்கே இருக்கிறது. மக்களுக்கு ஒரு சொட்டு நீரும் அருந்தாது உயிர்துறக்கும் வரலாற்றை படிக்க, கேட்க, பார்க்க, பேச வைத்தவன் திலீபன்.

மக்களின் விடுதலையை நேசித்து அகிம்சைப் போருக்கு உன்னதம் சேர்த்த திலீபனின் கனவு எழுச்சி பெற்று மக்கள் போராக வளர்ந்து வருகிறது.

## தாய் நாட்டிற்காக உயிரை கொடுக்கப்போவதை இட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் !




*தியாகி லெப்.கேணல். திலீபன் நல்லூர் வீதியில் உண்ணா நோன்பிருந்தபோது, இரண்டாம் நாள் தன்முன்னால் கூடியிருந்த மக்கள் மத்தியில் ஆற்றிய உரை இது.......*

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நீர்க வெறுமில்லை. இருந்துகொண்டே பேசுகிறேன். நாளை நான் கயறிவனவோடு இருப்பேனோ தெரியாது. அதனால்தான் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். ஏற்கெனவே 650 பேர் இலட்சியத்திற்காக மரணித்துவிட்டனர்.

மில்லர் கடைசியாகப் போகும் போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். 'நான் எனது தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலை அடையும் காட்சியை என்னால் காணமுடியாமற் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும்' எனக் கூறி விட்டு வெடிமருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன் சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதி கோரிய போது 'திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன்!' எனக்கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர்தான் உங்களுக்கு கிடைத்துள்ளார். நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள் ஊர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். அதை வானிலிருந்து எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனநிறைவாக நம்பியபோது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளேன். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் எமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான, உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடையவேண்டும் என்பதே எனது இறுதி ஆசை வணக்கம்.



# லெப்.கேணல் சரா

## சின்னத்துரை சிவராசா
## கல்வியங்காடு

சரா,...... சரா,........

அவனது முகத்தைக் கடைசியாக ஒரு தரம் பார்க்க வேண்டும். எனக்கு இதயம் வெடித்து விடும்போல் இருந்தது.

எங்கள் போராளிகளின் உடல்கள் துப்பரவு செய்யும் இடம்.

'சராவின் உடல் வந்து விட்டதா?' என்னை மாதிரிப் பலர் கேட்டுக்கொண்டு நின்றார்கள். உள்ளே போனேன். வீரமரணமடைந்த எமது போராளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முகங்களாக நான் தடவினேன். எனக்குப் பழக்கமான சராவின் முகத்தைக் காணவேயில்லை. ஆனால் அந்தத் தோழர்களின் முகங்களும் எனக்குப் பல கதைகளைச் சொல்லின.

இளமையான சற்று நிறமான சுருள்சுருளான தலைமயிருடன் ஒரு போராளி முகம் வாடிக் கிடந்தான். அவன் உயிரை அழைத்துச் சென்ற விமானக் குண்டு வயிற்றை ஆழமாகச் சிதைத்திருந்தது.

அவனைக் கடந்ததும்,

சின்னப் போராளி ஒருவன் தூங்கிக்கொண்டிருந்தான். கால் ஒன்று தொடையில் ஆழமாகப் பிய்ந்திருந்தது. உடலைக் குறுக்காகவும் ஒரு ரவை துளைத்திருந்தது. உயிர் பிரியும்போது இருந்த வேதனை அந்தச் சின்னமுகத்தில் படிந்து போய்க்கிடந்தது.

அடுத்ததாக ஒரு போராளி சப்பாத்துக் கூடக் கழட்டாமல் கிடந்தான். சீருடை கூட ஒழுங்காக இருந்தது. அவன் எப்படி மரணித்தான்? முகத்தைத் திருப்பினேன்.

முகத்தின் ஒரு பக்கம் கோறையாக இருந்தது.

இப்படிப் பல போராளிகள்..........

இவர்களில் சிலரைச் சராவின் பயிற்சி முகாமில் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில் வேகமாகச் செல்லும் வாகனமொன்றிற்குள் சிரித்தபடி சென்றிருப்பதைக் கண்டிருக்கிறேன். அந்தத் தோழர்கள்தான் இன்று இப்படி..........

இந்த மரணங்களை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் இவர்கள் துப்பாக்கிகளைத் தொட்டார்கள். போர் முனைகளிற்கு வெளிக்கிடும் போதும் வழியிலும் எதிரியை எதிர்த்து நின்று போராடும் போதும் தமது மரணத்தைப்பற்றி இவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

ஆனாலும் இந்த இளவீரர்கள் உறுதியாக நின்று போராடினார்கள். இவர்களின் நெஞ்சங்களில் இருந்ததெல்லாம் விடுதலை என்ற உணர்வு ஒன்றேதான். தன்னை இழந்து சுதந்திரத்திற்காகப் போராடும் மனவன்மையை இவர்களுக்குத் தந்தது நம்பிக்கைதான். தலைவர் மீது கொண்ட நம்பிக்கை தங்கள் இலட்சியம் நிச்சயம் வெல்லப்படும் என்ற நம்பிக்கை இவைதான் இந்த இளைஞர்களை மலைபோன்ற மாவீரர்களாய் மாற்றி நிற்கிறது.

அந்த இடத்தில் ஒரு ஓரமாக சிலர் ஒவ்வொரு உடலைகத் துப்பரவு செய்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்கள் சோகமாக இருந்தன. அலங்கோலமாகக் கிடந்த போராளிகளின் உடல்களை ஒழுங்கு படுத்தி அடிமனதின் விருப்பத்தோடு உயிர் கொடுக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள், ஏற்கனவே எடுத்து வைத்த சவப் பெட்டிகளில் அளவுக்கு ஏற்ற மாதிரி அந்தப் போராளிகள் கிடத்தப்பட்டார்கள் சராவின் உடல் வரவேயில்லை.

ஒரு மண்வீதியால் விழுந்து கடற்கரையில் ஏறுகிறேன். அந்தச் சிறுகடல் கோபத்தில் அலைகளை அள்ளி வீசமுடியாமல் தவித்துத் தளதளத்துக் கொண்டிருந்தது. இந்த வீதியால் இந்தக் கடலைப் பார்த்துக் கொண்டுதான் சரா அடிக்கடி போவது வழமை என்னையும் இந்த வீதியால் சில தடவைகள் அவன் நடாத்திய பயிற்சி முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தான்.

இன்று இந்தக் கடல், மக்கள், குன்றும் குழியுமாக இருக்கும் வீதி எல்லோருமே அவனை இறுதியாக ஒரு தரம் பார்க்க ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வானம் இருண்டு திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. கரு மேகங்கள் எங்கேயோ வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தன. அதில் சராவை மாதிரியே ஒருமேகம். அவனது கறுப்பு அவனுடன் இருக்கும் சாதுவான தாடி, பழகும் போது வீசும் குளிர்மை..........

அந்த மேகம் எனக்குக் கதைசொல்லத் தொடங்கியது.

நாங்கள் வெப்பமான மலைகளிற்குக் கீழ் வாழ்ந்த இனிமையான காலம் எமது பயிற்சி முகாமிற்கு சரா ஜேர்மனியில் இருந்து வந்திருந்தான் அந்தப் பயிற்சி முகாமின் வெப்பமான சூழ்நிலை -கடுமையான பயிற்சி எல்லாமாகச் சேர்ந்து அவனது வெளிநாட்டுத் தோற்றத்தை இலகுவாக மாற்றி ஒரு கிராமப்புறத் தோற்றத்தைத் தந்து விட்டது.

பொதுவாக பயிற்சி முகாம்களில் சிலர் மட்டும்தான் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் ஏதோ ஒரு திறமை, அது நடிப்பாகவோ விளையாட்டாகவோ இருக்கும். அப்படி எல்லோராலும் அறியப்பட்டவர்களில் சராவும் ஒருவன்.

குளப்படிதான் அவனது திறமை.

எங்கள் பயிற்சி முகாமின் பொறுப்பாளர் பொன்னம்மானின் கண்கள் எப்போதும் சராவைத்தான் சுற்றும். குளப்படிகளைச் செய்துவிட்டு அவன் தப்பி விடுவான் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அந்தப் பயிற்சி முகாமின் இனிமையான கலகலப்புக்குக் காரணங்களில் சராவும் ஒருவன். பயிற்சி முடிந்தபின் நாங்கள் சிலர் முதன் முதலில் முகாமில் இருந்து பிரிந்து சென்றோம். அந்தச் சின்னப் பிரிவைத்தாங்க முடியால் எல்லோரும் இயலுமட்டும் அழுது தீர்த்தோம். அப்போது நான் சராவைப்



## போராளியின் குருதிச்சுவடுகள்

பார்த்தேன். கலங்கிய கண்களுடன் அவன் எனக்கு விடை தந்தான். அதன் பின்பு மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்தான் சராவைப் பார்த்தேன். ஜி 1 துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தான். அவனது உயர்ந்த கம்பீரமான தோற்றத்திற்கு அது பொருத்தமாக இருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் தான் செய்தவற்றைச் சொன்னான். யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் தான் பங்குபற்றியதாகக் கூறினான்.

காலங்கள் சென்றன. சரா கல்வியங்காடு திருநெல்வேலிப் பகுதிகளுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அப்பகுதியில் சராவை, சராவின் செயற்பாடுகளை எல்லா மக்களுமே விரும்பினார்கள்.

அந்த நேரத்தில்தான் இந்தியப் படைகள் தென்றலெனச் சொல்லிக் கொண்டு எங்கள் தேசத்தில் புயலாய்ப் புகுந்தார்கள். இந்த மண்ணின் மீது தங்கள் கோரக்கரங்களை அகல விரித்தனர்.

இந்த வல்லாதிக்கத்துக் கெதிராக புலிகள் தொடுத்த போரில் சரா முன்னணியில் நின்று திறமையாகச் சண்டையிட்டான். ஒரு முறை இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்லும்போது சராவின் கையில் ஆழமாகக் காயமேற்படுகிறது. அதன் சிகிச்சைக்காகத் தமிழகத்திற்குச் சென்றான். அங்கு வைத்து இந்திய அரசால் கைது செய்யப்பட்டான்.

இந்தியர்களின் சிறைகளில் இருவருடங்களைக் கழித்த




பின் தமிழீழம் அவனை வரவேற்றது. சராவினது போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது.

சிறீலங்கா அரசுடனான போர் மீண்டும் தொடங்கிய பின் யாழ் கோட்டை இராணுவமுகாம் மீதான முற்றுகைப் போரில் சராவும் ஒருவனாகக் கலந்து கொண்டான். கோட்டை வெற்றிகொள்ளப்பட்டதன் பின்பு புலிகளின் பயிற்சி முகாம்களிற்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான்.

ஆனையிறவு இராணுவத்தளம் மீதான முற்றுகைப் போர் ஆரம்பித்தவுடன் அப்போர் முனையில் ஒரு தளபதியாகச் சராவும் நின்றான். பழைய தடைமுகாம் இராணுவத்தினர் மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை. எல்லாமாக 63 போராளிகளை நாங்கள் இழந்திருந்தோம். சராவிற்குக் காலில் காயம் வைத்தியசாலை வாசலில் நின்றான். நான் அவனைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். சின்னக்காயம் தான் பழையபடி போர் முனைக்குப் போவதாகச் சொன்னான். 'இழப்புக்கள்தான் அதிகம் போராட்டம் வளரும் போது போர் முனைகளும் பெரியதாக மாறும் இழப்புக்களும் அதிகமாகத்தான் இருக்கும். இதைத் தவிர்க்க முடியாது' என்றான். அந்த நேரத்தில் அவசரமாக வந்த வாகனம் ஒன்றில் ஏறி அவன் போர்க்களத்திற்குச் சென்றுவிட்டான்.

ஆனையிறவு முற்றுகையை முறியடிப்பதற்காக கடற்கரையில் இறக்கப்பட்ட இராணுவத்தினர் நெருப்பு மழையைப் பொழிந்து கொண்டே முன்னேறத் தொடங்கினார்கள். இரவும் பகலும் வானத்தில் நீந்திய விமானங்கள் அங்குலம் அங்குலமாக குண்டுகளை விதைத்தன. கடலிலிருந்து நிலத்தை நோக்கி அலை அலையாகக் குண்டுகள் வந்து கொண்டிருந்தன. சிறீலங்கா அரச இயந்திரங்கள் தங்கள் முழுப்பலத்தையும் திரட்டி வெளிக்காட்டியவாறு முன்னேறி வந்தார்கள். இந்த நிலையில் இரண்டாவது தடவையாக தடைமுகாம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஒன்றுக்குப் புலிகள் திட்டமிட்டனர். கவச வாகனங்களின் உதவியுடன் எம்மவர்கள் முன்னேறுவதாக இருந்தது.

தாக்குதல் ஆரம்பமாகும் நேரம் எமது [illegible] நின்று புறப்படும் இடத்தில் நானும் நின்றேன். சரா வந்தான் என்னுடைய கன்னங்களைத் தடவினான். '[illegible] என்னுடைய நல்லபடம் வைத்திருக்கிறாயா?' என்று கேட்டான்.

'ஏன்' நான் விளங்காமல் கேட்டேன்.

'நான்தான் பேசாமல் கொண்டு போறன்' என்றான். பயிற்சியிலிருந்து நாங்கள் பிரியும்போது கலங்கிய கண்கள் இன்று மீண்டும் கலங்கியது.

ஆனால் இந்தப் பிரிவு.... நான் விழிகளைத் துடைக்க வேறு பக்கம் திரும்பினேன். சரா இன்னொரு தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

'எனது உடல் சிதையாமல் வந்தா, இந்தச் சீருடையைப் போடுங்கோ இந்தப் புலிக்கொடியைப் போர்த்துங்கோ.'

இந்தச் சண்டையில் [illegible] சண்டைகள் மிகக் குறைவு என்பது சராவிற்கு நன்றாகவே தெரியும். தங்கள் மரணத்தைத் தெரிந்து கொண்டு போர் முனைக்குச் செல்லும் உயர்ந்த மனிதர்களை இந்த மண் பிரசவித்திருக்கிறது.

தாக்குதல் தொடங்கியது. துப்பாக்கி ரவைகளால் அரண்களை அமைத்தபடியே புலிகள் முன்னேறினார்கள். சராவின் வாகனமும் முன்னேறியது. ஒரு பீரங்கிக் குண்டு அந்த வாகனத்தில் பட்டுவெடித்தது.

சரா, அவனுடன் சேர்ந்து சென்ற குகதாஸ்...... தாக்கு

(தொடர்ச்சி 15ம் பக்கம்)


# குண்டுகள் மீட்கப்படுவதாக விடப்படும் கதைகளையும் மீறி.. குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் அதிகம்!



[illegible]



[illegible]



[illegible]

சுப்பு

# நம்பிக்கை



ப.தமிழினி

மாலை நேரத்து மஞ்சள் வெய்யில் பார்க்கும் இடமெங்கும் மஞ்சளாய் அடித்திருந்தது. கரும்புத் தோட்டத்திற்குச் செல்லும் வீதி எதிரே நீண்டு சென்றது. வீதியின் இரு மருங்கிலும் நீண்டுகிடந்த வாய்க்காலில் நீர் வரண்டுபோய் நிலம் பாளங்களாக வெடித்துக் கிடந்தன.

காட்டு வெயிலைத் தாங்க முடியாமல் செடி, கொடிகள் வாடிச் சுருண்டு போயிருந்தன. வாய்க்காலின் ஓரமாக அனேக சிறு குடிசைகள் உருவாகியிருந்தன.

தெருவோரமாகச் சிறுவர்கள் உருண்டு, புரண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். பெரியவர்கள் மரங்களின் கீழ், வாய்க்கால் கரைகளில் நின்று கூடிக் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

வாய்க்காலின் சரிவில் மரங்களின் நடுவே போடப்பட்டிருந்த சிறு குடிசையில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். தாயையும் மூன்று பிள்ளைகளையும் கொண்ட ஒரு சிறிய குடும்பம். குடிசையின் சுவரோடு சாய்ந்தபடி எங்கோ தொலைவை வெறுத்தபடி யோசனையோடு அமர்ந்திருந்த கமலம், மகளின்குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

அன்னை தண்ணி அள்ளிக் கொண்டு வாறாரம்மா.

ஆ ... ... சரிநான் தண்ணியை வேண்டியாறன் நீ போய் அடுப்பை மூட்டு.

எனக் கூறியபடி அவசரமாக எழுந்து சென்று மகனிடமிருந்து தண்ணீர் வாளியை வாங்கிக் கொண்டாள்.

வாளியைக் கொடுத்துவிட்டு சோர்வோடு சென்று மரத்தடியில் அமர்ந்த மகன் மதியைப் பார்க்கும் போது அவளுக்கு நெஞ்சு வெடித்தது.

இவன் படிச்சு நல்லாவருவான் எண்டு நினைச்சிருந்தம். நல்லாப் படிச்சுக் கொண்டு வந்தவன்.

இந்தப் பிரச்சினையால எல்லாம் சீரழிஞ்சு போச்சு இனி என்ன செய்யிறது.

பெருமூச்சு விட்டபடி அடுப்படிக்குள் நுழைந்தாள் கமலம்.

அடுப்பை மூட்டிக் கொண்டிருந்த மூத்த மகள் தாய் உள்ளேவருவதைக் கண்டதும், அம்மா தங்கச்சி நித்திரையாப்போட்டாள்.

என்ன?

என்ற படி திரும்பியவளின் கண்களில் இளையமகள் சுருண்டுபோய்ப் பசிக்களையோடு உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

சோர்ந்து போயிருந்த மகளின் முகத்தைப் பார்த்தவளுக்கு இனம்புரியாத வேதனை நெஞ்சில் எழுந்தது.

கடவுளே பாவம் பசிக்குது பசிக்குது என்டு அழுதது அதுக்கிடையில நித்திரையாப் போட்டுது என மனதிற்குள் நினைத்துக் கவலைப்பட்டபடி

பிள்ளை கொஞ்சம் அரிசி இருக்குது. கஞ்சி காச்சுவம். தங்கச்சி கொஞ்ச நேரம் படுத்திருக்கட்டும். கஞ்சியைக் காய்ச்சிப்போட்டு எழுப்புவம் அவளை.

ஓமம்மா என்றபடி மூத்தவள் தாயுடன் சமையல் வேலைகளைச் செய்யத் தொடங்கினாள்.

மரத்தோடு சாய்ந்தபடி அமர்ந்திருந்த மதிக்கு சுவரோடு சாத்தியிருந்த கோடாலியைக் கண்டதும் துக்கம் தொண்டையை அடைத்தது.

ஐயோ?.. அப்பா கெதியில வாங்கோ அப்பா எங்க நிக்கிறியள். உங்களைப் பார்க்கவேணும் போல கிடக்குதப்பா.

மனதிற்குள் அரற்றியபடி கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

குமரபுரத்தில் அவர்கள் வாழ்க்கை அமைதியாக் கழிந்துகொண்டிருந்தது.

அவர்கள் தந்தை சிவராசா வீடு வீடாகச் சென்று விறகு கொத்திக் கொடுத்தார். இதன் மூலம் கிடைத்த சிறிய வருமானத்தைக் கொண்டு அவர்களது சீவியம் நடந்துகொண்டிருந்தது.

களைத்து விழுந்து வீட்டுக்கு வரும் தந்தையைக் காணும் போது துக்கம் நெஞ்சை அடைக்கும்.

அப்பா நாளும் ஏதாவது வேலை செய்யிறன் என்பான் மதி.

தந்தை மென்மையான சிரிப்போடு அவன் தலையைத் தடவியபடி

மதி நான் கஷ்ரப்பட்டெண்டாலும் உங்களைப் படிப்பிக்க வேணும். நீங்கள் மூணுபேரும் படிச்சு நல்லாவரோணும். அது தானப்பன் என்ர ஆசை.

படிச்சு உத்தியோகம் பார்த்து பிறகு எங்களைப் பாருங்கோவன். இப்ப உந்த யோசனைகளை விட்டிட்டுப் போய்ப் படியப்பன் என்பார்.

சரியப்பா

தளர்ந்த நடையுடன் சென்று படிக்க ஆரம்பிப்பான்.

அப்போதெல்லாம் அவன் மனதில் ஒரு உறுதி எழும், நான் படிச்சு முன்னுக்கு வரவேணும் என்ர குடும்பத்தைக் காப்பாற்ற வேணும் என்ர குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கஷ்ரப்பட்டு படிப்பான்.

சத்ஜெய நடவடிக்கையின்பின் அவர்களது வாழ்க்கையே தலைகீழாக மாறிப் போனது.

இராணுவ நடவடிக்கை தொடங்கியதும் எங்கும் பதட்டம் சூழ்ந்து கொண்டது.

மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் பெயரத் தொடங்கினர் இவர்கள் வீட்டிற்கு அருகிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின.

வெடிமருந்தின் நெடி காற்றில் எழுந்து மரங்கள் முறிந்து விழுந்தன, கிளைகள் தூர வீசியெறியப்பட்டன,

கட்டடங்கள் நொருங்கின, மண்ணும் கற்களும் சிதறின.

பதட்டத்தோடு வீட்டைவிட்டு ஓடத் தொடங்கினர்.

கையில் அகப்பட்ட ஒரு சில பொருட்களோடு அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்த கோடாலியையும் எடுத்துக் கொண்டு ஊரைவிட்டு வெளியேறி உருத்திரபுரத்தில் உள்ள உறவினர் வீட்டை அடைந்தனர்.

மதிக்கு அவ்வளவு பதட்டமான நிலையிலும்

மதி உன்ர பாடப்புத்தகங்கள் எல்லாவற்றையும் எடு. சாமான் போனாலும் பரவாயில்லை கொப்பிகளை தவறவிட்டுடாதை.

என்று கூறிய தந்தையின் குரல் இன்னும் காதில் ஒலிப்பது போல இருந்தது.

சத்தம் ஓய்ந்ததும் வீடுபார்க்க, சாமானுகள் எடுக்க என்று சனம் திரும்ப குமரபுரம் செல்வதை அறிந்து சிவராசாவும் சென்றிருந்தார்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

சாமான் எடுக்கச் சென்றவரைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

அழுதழுது சோர்ந்து போய் படுத்திருக்கும் தாயையும் தங்கையையும் காணும்போது அடி வயிறு கலங்கும்.

நெஞ்சம் பதைபதைக்க ஒவ்வொரு இடமாக ஓடி ஓடி விசாரித்துவிட்டுச் சோர்ந்துபோய் வீடுதிரும்புவான்.

இந்த நிலையில் திரும்பவும் சண்டை தொடங்கியபோது கலங்கிப்போனார்கள்.

உருத்திரபுரத்திலும் தொடர்ந்து இருக்க முடியாத நிலை ஏற்பட்டது.

மக்கள் ஸ்கந்தபுரக் காட்டுப் பகுதியை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர்.

ஆரம்பத்தில்

அப்பா வந்தால் எங்களைத் தேடுவார் அப்பாவரை வாறம். நீங்கள் போங்கோ

என்று கூறிமறுத்தனர்.

இறுதியில் அவர்கள் இருந்த வீட்டின் வற்புறுத்தலின் பேரில் ஸ்கந்தபுரத்துக்கு வரச் சம்மதித்தனர்.

ஸ்கந்தபுரத்திற்கு வந்தபிறகும் ஏக்கமும் அழுகையுமாகவே இருந்தார்கள்.

அப்பா எங்களை விட்டிட்டு நிற்கமாட்டாரே மதி ஆமி பிடிச்சானோ...... செல்ல பட்டுதோ ....

அம்மா கலங்கிப்போய் அழுது கொண்டிருந்தாள்.

அப்பிடி நடவாது ஆமி பிடிச்சாலும் இவர் வயது போனவர்தானே கொஞ்சநாளில் விட்டுடுவாங்கள். அப்பா எப்படியும் வந்திடுவாரம்மா.

அவன் ஆறுதல் சொல்வான்

அப்பாவைப் பற்றிய ஏக்கத்துடன் வறுமையும் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலையில் ஒரு நேரம் சாப்பிடுவதற்கே வழியில்லாமல் சிரமப்பட்டனர்.

மாறிமாறி மலேரியாக் காய்ச்சல் வந்தபோது நிலைமையை சமாளிக்க முடியாமல் திகைத்துப் போனான் மதி.

சுவரோரம் சாத்தி வைக்கப்பட்டிருந்த கோடாலியைப் பார்க்கும் போதெல்லாம் தந்தையின் நினைவு எழுந்து நெஞ்சில் பாரமாய் கனக்கும்.

கனத்துப்போன மனத்தோடு மரத்தில் சாய்ந்திருந்தான்.

மதி உன்னோட படிச்ச பொடியன் வந்திருக்குதுகள். தாயின் குரல் கேட்டுத் திரும்பி வீதியைப் பார்த்தவன் பரபரப்போடு எழுந்து தெருவை நோக்கிச் சென்றான்.

புத்தகமும் கையுமாக நின்ற அவர்களைப் பார்த்தபோது நெஞ்சிற்குள் மெல்ல வேதனை எழுந்தது.


என்னடா மதி ரீட்டல் வகுப்புக்கள் தொடங்கிற்றுது நீ என்னமாதிரி வரேலையோ அண்டைக்கும் கேக்க பிறகு வாறன் என்றிட்டாய்.

பாப்பம்

என்னடா பாப்பம் எண்டுறாய். நீ வந்து சேரேக்கிடையில நிறைய சிலபஸ் போயிடும் போல கிடக்குது.

என்னவோ கெதியில வந்துசேர்!

என்று கூறிவிட்டு செல்பவர்களையே கண்கலங்க பார்த்துக் கொண்டிருந்தான்.



இவர்களைமாதிரி நானும் இருக்கே லாதுதானே.

என எண்ணியபடி வாடிப்போன முகத்துடன் திரும்பிவந்து மரத்தடியில் அமர்ந்தான்.

ஏன் வந்தவர்கள் என்று கேட்டபடி வந்து அமர்ந்துகொண்டாள் கமலம்.

[illegible] தொடங்கிற்றாம். என்னையும் வந்து சேரச் சொல்லுறாங்கள்.

என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தபடி தலையைக்குனிந்து கொண்டு அமர்ந்திருந்த மதியைப் பார்க்க கமலத்திற்கு வயிற்றுக்குள் பிசைவது போல இருந்தது.

நீயும் படிக்கவேணும் தானே.

சாப்பிடவே வழியைக்காணேலை. நான் என்ன படிக்கிறது.

உருத்திரபுரத்தில பக்கத்து வீட்ட இருந்த கனகம்மாக்காவையள் உதில கிட்டத்தான் இருக்கினம். மா இடிக்கவேணும் எண்டவை நான் போய் மா இடிச்சுக் குடுப்பம் எண்டு யோசிக்கிறன்.

கொஞ்சம் காசு வருமல்லோ.

என்ன? திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தான் மதி. எதிரே சோர்ந்து ஒடுங்கிப் போயிருந்த தாயின் மெலிந்த முகத்தைக் கண்டதும் நெஞ்சம் பதைபதைக்க,

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# கணப்பொழுது



## கப்டன் சிந்து

உலகிலேயே மிகப் பெரிய போர் இரண்டாம் உலகப்போர். 3ம் உலகப்போர் என உலக ஆய்வாளர்களால் கூறப்படுவதுதான் எங்கள் மாபெரும் தானைத் தலைவனால் ஓயாத அலைகள் எனப் பெயர் சூட்டப்பட்டு நடாத்தப்பட்ட நடவடிக்கையான முல்லைப் போர். அந்தப் போரில் கைப்பற்றப்பட்ட வீரமண்ணில் அதுதான் முல்லைத்தீவில் 1975.06.10 அன்று இந்த ஓயாத கடல் அலையின் தாலாட்டோடே வந்துதித்தான்.

[illegible]



[illegible]

## போராளியின்...

[illegible]

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் முப்பத்திரண்டு

தொடர்ச்சி...

'வேறு கேள்விகள் ஏதுமிருக்கிறதா?'

உண்ணாவிரதப் போராட்டம் - மணித்தியால இல. 42

அமெரிக்காவில், தென் ஆபிரிக்காவில், இங்கிலாந்தில், சின்னக் கோக்களிலும், ஆலயங்களிலும், எக்ஸோடசில் இருக்கும் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக மக்கள் தொகையாகக் கலந்து கொண்ட பிரார்த்தனைகள் நடைபெற்றன.

உண்ணாவிரதப் போராட்டம் - மணித்தியால இல. 45

ஆர்ஜென்ரீனாவின் யூதர்கள், எக்ஸோடசில் இருக்கும் குழந்தைகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் உண்ணா நோன்புகளை மேற்கொண்டார்கள்.

உண்ணாவிரதப் போராட்டம் - மணித்தியால இல. 47

கிற்றி எக்ஸோடசில் ஏறியபோது இருள் சூழ்ந்திருந்தது. துர்நாற்றம் சகிக்க முடியாதிருந்தது. தளத்தில் எல்லா இடத்திலும், உயிர்காப்புப் படகுகளிலும், கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் எங்கும் மனித வெள்ளத்தைக் கண்டாள் எல்லோரும் மீதமிருக்கும் சக்தியைப் பேணும் வண்ணம் அங்கங்களை அசைக்காமல் சும்மாவே படுத்திருந்தார்கள்.

'மயங்கிவிட்ட பிள்ளைகளைப் பார்க்க விரும்புகிறேன்.' அவள் சொன்னாள்.

டேவிட் அவளைக் கப்பலின் முன் பகுதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே மூன்று வரிசையில், அறுபது பிள்ளைகள் வரை படுக்க வைக்கப்பட்டிருந்தனர். டேவிட் மண்டியிட்டு விளக்கைப் பிடித்துப் பிடிக்க ஒவ்வொரு பிள்ளையிடமும்போய் அவர்களது நாடித்துடிப்பையும், கண்மணிக்கூடாகவும் பார்வையிட்டாள். கரேனைப்போல் தோற்றமளித்த பிள்ளைகளைக் கண்டு அரைடசின் தடவைகள் இதயம் பலமாக அடித்துக் கொள்ள மயக்கமாகி விடப்போவது போலிருந்தது. டேவிட் அவளை, நெருக்கடி மிகுந்திருந்த மேல் தளத்தைச் சுற்றிப் படுத்திருந்தவர்களைக் கடந்தபடி சென்று சுற்றிக் காட்டினான். பிள்ளைகள் அவளை ஒரு இலக்குமில்லாமல், அவளை நோக்கி ஒளி இழந்த விழிகளால் பார்வையைச் செலுத்தினர். அவர்களுடைய மயிர்கள் திரண்டு, முகங்களில் அழுக்கு நிறைவிலே அப்பியிருந்தது.

டேவிட் அவளைச் சரிவு குறைந்த ஏணியின் மூலம் சரக்கு வைக்கும் இடத்தின் தளத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்த நாற்றம் அவளைச் சூழ்ந்து கொள்ளக் கிட்டத்தட்ட வாந்தி எடுக்கும் நிலைக்கு வந்தாள், இருந்த குறைந்தளவு வெளிச்சத்தில் பிள்ளைகள் ஒருவருக்கு மேல் ஒருவராகப் படுத்திருக்கும் பரிதாபமான காட்சியைப் பார்த்தாள். சரக்குப் பகுதியின் கீழ்த்தளத்தில் பிள்ளைகள் நெருங்கியடித்தபடி படுத்திருந்தனர். கரேனை ஒரு மூலையில் கைகள் கால்களின் பிணைப்பில் கண்டுபிடித்தாள். அவளுக்கு அருகில் டொவ் நித்திரைசெய்து கொண்டிருந்தான். அவர்கள் கந்தைகளின் மேல் படுத்திருந்தனர். அவர்களுக்குக் கீழ் வழுவழுப்பாய் இருந்தது.

'கரேன்— நான்தான் கிற்றி வந்திருக்கிறேன்' மெதுவாகக் கிசுகிசுத்தாள்.

கரேனின் விழிகள் படபடத்துத் திறந்து கொண்டன.

கண்களைச் சுற்றிக் கடுமையான கருவளையங்கள் விழுந்திருந்தன. அவளுடைய உதடுகள் உலர்ந்து இறுகிப்



போயிருந்தன. எழுந்து உட்காரக்கூட அவளிடம் பலம் இருக்கவில்லை.

'கிற்றி?'

'ஆமாம்... நான்தான்.'

கரேன் தன்னுடைய கைகளை விரித்து பிடிக்க, கிற்றி அவளைப் பல கணங்களுக்கு ஆதரவாக இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

'என்னை விட்டுப் போகாதே கிற்றி. எனக்குப் பயமாக இருக்கிறது.'

'நான் உன் அருகிலேயே இருப்பேன்' சொல்லிவிட்டு அவள் கையை மெதுவாக விடுவித்தாள்.

ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கு இருந்த குறைந்தளவு பொருட்களை பார்வையிட்டு விட்டு, சோர்வான பெருமூச்செறிந்து விட்டு, 'இங்கு செய்யக்கூடியது அதிகமில்லை' என்றாள். டேவிட்டிடம், நான் முடிந்தளவு வசதியாக அவர்களை வைக்கப் பார்க்கிறேன் நீயும், ஜோஆப்பும் என்னோடு வேலைசெய்ய முடியுமா? என்றாள்.

'தாராளமாக.'

'சில உணர்விழந்த பிள்ளைகளின் நிலை மிக மோசமாக இருக்கிறது. அவர்களின் காய்ச்சலைக் குறைக்க அவர்களை ஒற்றியெடுக்கவேண்டும். மேல் தளத்தில் குளிராக இருக்கிறது எல்லோரையும் மூடிவிடவேண்டும். அதன் பின்பு வேலை செய்யக்கூடிய எல்லோரும் இந்தக் கப்பலை சுத்தம் பண்ண வேண்டும் என விரும்புகிறேன்.'

மரணத்தைத் தவிர்க்க பல மணிநேரம் கிற்றி அசர வேகத்தில் போராடினாள். அது சமுத்திரத்தை சிப்பியினால் நிறைக்க முயல்வது போன்றிருந்தது. ஒரு குழந்தையின் நிலையை நல்ல நிலைக்குக் கொண்டுவரும் போது வேறு மூன்று பேர் நிலை மோசமடைந்தது. அவளுக்குத் தேவையான மருந்துகள் நீர் போன்றவையும், மற்றய வசதிகளும் இல்லாததால் அதிகம் செய்ய முடியவில்லை. இருந்த ஒரே ஆயுதமான உணவைக்கூடப் பாவிக்க முடியாமல் போயிற்று.

உண்ணாவிரதப் போராட்டம் - மணித்தியால இல. 81

எக்ஸோடசின் தளத்தில் எழுபது பிள்ளைகள் நினைவிழந்த உறக்க நிலையில் (Coma) ஆழ்ந்திருந்தனர்.

கப்பல் கட்டும் துறையில், பிரிட்டிஷ் இராணுவத்தாரிடையே முணுமுணுப்பும், அமைதியின்மையும் ஏற்பட்டன. அதிகமான சிப்பாய்கள் நடப்பதைப் பொறுக்கமுடியாமல் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படக்கூடும் என்று தெரிந்தும் தங்களை அங்கிருந்து அகற்றக் கோரினர். சைப்பிரசின் கண்கள் கைரேனியாவிலேயே நிலை கொண்டன.

உண்ணாவிரதப் போராட்டம் மணித்தியால இல. 82

கரேன் ஹான்சன் கிளமென்ற் உணர்விழந்த நிலையில் கப்பலின் முன்புறத்துக்குத் தூக்கி வரப்பட்டாள்.

உண்ணாவிரதப் போராட்டம் மணித்தியால இல. 83

கிற்றி கப்பலின் செலுத்தும் பகுதிக்குள் வந்து, அலுப்போடு ஒரு கதிரையினுள் சரிந்து கொண்டாள் முப்பத்தைந்து மணி[illegible] செய்த அவளின் மனம் ஒழுங்கற்றுக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. அரி, அவளுக்காக பிராண்டியை ஊற்றிக் கொடுத்து, 'நீ குடி — நீ உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவில்லைத்தானே' என்றான் அவள் அதை உறிஞ்சி விழுங்கினாள். இரண்டாவது கோப்பை அவளுக்கு சுயநிலையை மீட்டுவந்தது. அவள் அரி பென் கானானை நீண்ட நேரம் கடினமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவன் ஒரு சக்தி வாய்ந்த மனிதன். முற்றுகையின் விளைவுகள் எதுவும், கிட்டத்தட்ட அவனில் தெரியவில்லை. அவள் அவனுடைய உணர்ச்சியற்ற கண்களை உற்று நோக்கி, அவனது மூளைக்கூடாக என்ன நினைவுகள், திட்டங்கள், தந்திரங்கள் அலைபாய்ந்து கொண்டி

**லியோன் யூரிஸ்**

ருக்கின்றனவோ என்று நினைத்துக் கொண்டாள் அவன் எப்போதாவது பயந்திருக்கிறானா? அல்லது பயத்தையே அறியாதவனா என்றும், எப்போதாவது துக்கத்தை அனுபவித்து கலங்கிப்போயிருப்பானா என்றும் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

'நீ இதைவிட முன்பே இங்கு வந்து என்னைச் சந்திப்பாய் என்று எதிர்பார்த்திருந்தேன்' என்றான் அவன்.

'உன்னை வந்து கெஞ்சமாட்டேன் அரி பென் கானான்.'

அரி பென் கானானுக்குப் பிறகு தான் கடவுளே— அல்லவா?

'சரி— சாவின் விளிம்பில் ஒரு டசின் பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் ஒரு நல்ல பாவ்லாக் மாதிரி இதனை அறிக்கையிடுகிறேன். அவர்கள் சாகப்போகிறார்கள். மிஸ்டர் பென்கானான் உங்கள் கட்டளை என்ன?'

'நான் முன்பும் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறேன். கிற்றி, அது என்னை வருத்துவதில்லை. இந்த உன்னுடைய மனிதத்துவம், இங்கிருக்கும் எல்லாப் பிள்ளைகளுக்காகவும், அழுகவும் அளவு உயர்ந்ததா! அல்லது ஒரே ஒரு குழந்தைக்காக அழுகிறதா?'

'இப்படிக் கேட்பதற்கு உனக்கு உரிமையில்லை.'

'நீ ஒரு குழந்தையின் உயிருக்காக மன்றாடுகிறாய். நான் இரண்டரை இலட்சம் மக்களின் உயிருக்காக கையேந்துகிறேன்.'

அவள் எழுந்தாள். எழுந்தவள் அவனை நோக்கி, 'அரி நான் என் வேலையைக் கவனிக்கச் செல்ல வேண்டும். நான் ஏன் வருகிறேன் என்று தெரிந்திருந்தால், ஏன் என்னை வரவிட்டாய்?' என்றாள்.

அவன் தன்னுடைய பின்புறத்தை அவளுடைய பக்கம் திருப்பிக்கொண்டு ஜன்னல் ஊடாக நாசகாரியும், குரூசரும் காவலாக நின்றிருந்த கடலை நோக்கி தன் பார்வையைச் செலுத்தியவன் சொன்னான்.

'நான் உன்னைக் காண விரும்பியதால் அப்படிச் செய்திருக்கலாம்.'

உண்ணாவிரதப் போராட்டம் மணித்தியால இல 83

ஜெனரல் சேர் கிளறென்ஸ் ரெவர் பிறவுண், கதர்லண்டின் அறையில் நடைபயின்று கொண்டிருந்தார். அவருடைய சுருட்டில் இருந்து வந்த புகை அறையை சூழ்கடித்திருந்தது. அவர் நின்று பலமுறை ஜன்னலூடாக கைரேனியாவின் திசையில் நோக்கினார். [illegible] கவனத்தைச் [illegible] பண்ணிவிட்டுக் கோப்பி மேசையிலிருந்த சாண்ட்விச் [illegible] தார். சேர் கிளறென்ஸ் நீங்கள் சிறிது கீழ அமர்ந்து சிறிது உணவருந்துங்கள். தேநீராவது சிறிது அருந்துங்கள் என்றார் அவர்.

ரெவர் பிறவுண் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டுப் பெருமூச்செறிந்தார். அவர் கீழ அமர்ந்து ஒரு சாண்ட்விச்சை எடுத்தார். அதை உற்றுப் பார்த்தார். சிறு கடியொன்று கடித்தார். பின்பு அதை விட்டெறிந்தார். 'நான் ஏதாவது சாப்பிட்டால் எனக்குக் குற்ற உணர்வாக இருக்கிறது' என்றார். 'மனச்சாட்சி உள்ள மனிதனுக்கு இது போல நிலைமையில் மாட்டிக்கொள்ளக் கூடாதுதான். இரண்டு யுத்தங்கள் ஏழு வெளிநாட்டுத் தூதராலய சேவைகள், ஆறு விருதுகள், மூன்று கௌரவப் பட்டங்கள், இவற்றுக்குப் பிறகு இப்போ ஆயுதமேந்தாத குழந்தைகளால் என்னுடைய முன்னேற்றம் தடுக்கப்பட்டிருக்கிறது [illegible] கால சேவையை முடித்துக் கொள்வதற்கு நல்லவழி இல்லையா சேர் கிளறென்ஸ்?'

ரெவர் பிறவுண் தன்கண்களைத் தாழ்த்திக் கொண்டார்.

'நீங்கள் என்னோடு கதைக்க விரும்புகிறீர்கள் என்று எனக்குப் புரியும்' என்றார் கதர்லண்ட்.

ரெவர் பிறவுண் சிறிது தேநீரை ஊற்றிக்கொண்டு அரைகுறை சங்கடப்பட்டுப் பெருமூச்செறிந்தார் புரூஸ் இங்கே பார்—

என்னால் முடியக்கூடிய விஷயமாக இருந்தால்—

தொடரும்...

# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

**அன்புடைச் சகோதரமே!**

ஈச்சங்குளத்தில் இருந்து கிடைத்த செய்தி நெஞ்சைப் பிழிந்தது. ஆவணி இருபத்தொன்பதாம் திகதி காலை பத்து மணியளவில் அந்த கோரச்சம்பவம் நடைபெற்றுள்ளது. சிறீலங்கா இராணுவத்தினர் அணிஅணியாக புறப்பட்டனர். சண்டைக்கு அல்ல. அதைவிடக் கேவலமான செயல் ஒன்றைச் செய்வதற்கு. ஈச்சங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலகத்தை சென்றடைந்த அந்த சிங்களப்படை அந்த துயிலகத்தினை தகர்த்தெறியும் வேலையை ஆரம்பித்தனர். தங்கள் இன்னுயிரை தேசவிடுதலைக்காக அர்ப்பணித்த மனித தெய்வங்களின் கோவில்களான கல்லறைகள் தகர்க்கப்பட்டன. தங்கள் வாழ்நாளெல்லாம் தமிழர் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்த் அந்த தியாகிகளின் பெயர்களைக்கூட நிலைக்கவிடக்கூடாதென்ற இனவெறியுடன் சிங்களப்படைகள் அந்தத் துயிலகத்தை தகர்த்து மகிழ்ந்தனர். அந்த முட்டாள்களுக்கு எங்கே தெரியப்போகிறது தமிழீழ மாவீரர்களின் நினைவுகளைச் சுமக்கும் இதயங்களுடன் தமிழீழ மக்கள் தமிழீழத்திலும் வெளியிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்ற உண்மை. கற்கோயில்களை அழிப்பதினால் இதயக் கோயில்களில் குடிகொண்ட மாவீரர்களை அழித்து விட முடியாது. யாழ்ப்பாண மண்ணை ஆக்கிரமித்த நேரத்திலும் மாவீரர் துயிலகங்களை அழித்து உழவு யந்திரங்கள் கொண்டு உழுதனர். ஆனால் அந்த மிலேச்சத்தனமான செயல் மாவீரர்கள் குறித்த தமிழீழ மக்களின் பக்தியை விடுதலைச்சக்தியாக மாற்றியது. முல்லைத்தீவு முதல் கிளிநொச்சி வரை தமிழீழ மண் விடுதலை கண்டு புதிய தளம் ஒன்று மாவீரர்களின் புகழ் ஓங்கச் செய்தது.

இன்று ரணகோச ஆக்கிரமிப்பினால் சிறீலங்காப் படைகளின் ஆக்கிரமிப்புப் பூமியாக மாறியுள்ள ஈச்சங்குளத்தில் சிறீலங்காப்படைகள் நடாத்தியுள்ள இந்த மாவீரர் துயிலகத்தை அழித்த மனிதப் பண்பாடற்ற காட்டுமிராண்டித்தனமான செயல் மீண்டும் தமிழீழ மக்கள் மத்தியில் விடுதலைச் சக்தி வீறு கொண்டெழ வைத்துள்ளது. தமிழர்களுக்காக உயிர் கொடுத்தவர்களின் நினைவுகளைக்கூட நிலைக்கவிட மனமில்லாத சிறீலங்காவால் தமிழர் பிரச்சினைக்கு எப்படி தீர்வு காணக்கூடும் என்ற சிந்தனையை தமிழீழ மக்கள் உலகின் முன் எழுப்பியுள்ளனர். இதனால் சந்திரிகா உலகின் கண்களில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடியவர் என்ற பாணியில் நடாத்தும் நாடகங்களின் நம்பகத்தன்மையை உலகு உணருவதற்கு இத்தகைய சம்பவங்கள் உலகிற்கு சந்தர்ப்பம் அளிக்கின்றன.

சந்திரிகாவின் சமாதான வேடத்தின் பின்னணியில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் தமிழ் மக்கள் அப்பட்டமான இனக்கொலைகளுக்கு உள்ளான கொடுமைகளை அதில் பங்கேற்ற சிறீலங்கா இராணுவத்தினரே தற்பொழுது செம்மணியில் அம்பலமாக்கி வருகின்றனர். 50 தமிழ் மக்களை தாட்ட 16 இடங்களும் 75 தமிழ் மக்களைத் தாட்ட 14 இடங்களும் 15 தமிழர்களைத் தாட்ட 5 இடங்களும் இப்பத்திரிகை அச்சுக்கு போகும் வரை கிருசாந்தி கொலை வழக்கு எதிரிகளான இரு இராணுவத்தினராலும் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த கணவனையும் மனைவியையும் இழுத்து வந்து அப்பெண்ணின் மேல் பலமுறை கூட்டாக பாலியல் வன்முறைகளை அவள் கணவன் முன்னேயே புரிந்து பின்னர் அந்த அப்பாவிகள் இருவரையும் கொன்று புதைத்த இடமென ஒன்று—தமிழராகப் பிறந்த குற்றத்திற்காக இடுப்பினை நொறுக்கி அந்த வேதனை தாங்க முடியாது அந்த அப்பாவித் தமிழன் துடிதுடித்து சாவதை வேடிக்கை பார்த்து புதைத்த குழி என ஒன்று — கைதடி கோவில் குருக்களையும் அவரின் உதவியாளரையும் மோட்டார் சைக்கிளுடன் நிறுத்தி வதைத்து கொன்று புதைத்த குழியென ஒன்று— கல்வித் திணைக்கள அதிகாரி செல்வரத்தினத்தையும் கூடவே சுதாகர் பார்திபன் என்ற தமிழ் மக்களையும் கொன்று புதைத்த குழியென ஒன்று— டிராக்டரில் வைக்கோல் ஏற்றுவது போல் தாம் கொன்று குவித்த 20 அப்பாவித் தமிழ் மக்களின் சடலங்களை அள்ளி வந்து புதைத்த இடம் என ஒன்று— இவ்வாறாக அப்பாவித் தமிழ் மக்களை புதைத்த குழிகளின் சரித்திரங்கள் நீண்டு செல்கின்றன. இப்புதைகுழிகள் பல மறுபடி தோண்டப்பட்டதற்கான அறிகுறிகள் நிறைய இருப்பதாகவும் ராஜபக்சவும் பெரேராவும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதனால் செம்மணி விசாரணையும் அதன் முடிவுகளும் சிறீலங்காவால் திசை திருப்பப்பட்டுள்ளது என்பதையும் உலகு உணர்கிறது. ஆயினும் உண்மைகள் வெளிவந்து விட்டன. இந்த உண்மைகள் தமிழ் மக்களைச் சித்திரவதைப்படுத்துவதை இனக்கொலை செய்வதை தங்கள் இச்சைகளுக்கு இலக்காக்குவதை இலக்காகக் கொண்ட இனவெறி இராணுவமாக சிறீலங்காப்படைகள் உள்ளன என்ற உண்மையை உலகிற்கு நிரூபித்து நிற்கின்றன. இந்த இனவெறி இராணுவத்தை யாழ். குடா நாட்டுக்குள் அனுப்பி தமிழ் மக்களின் அரசியல் பணிவை ஆயுதமுனையில் பெறும் அரசியல் நோக்கைத்தான் சந்திரிகா சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் செய்தார். இன்றும் சந்திரிகா புதிய புதிய பகுதிகளை ஆக்கிரமித்து அங்கு தமிழர்களின் கலாச்சார—வரலாற்றுச் சின்னங்களையும் தேச உட்கட்டுமானங்களையும் தமிழ் மக்களின் உயிர் உடமைகளையும் அழிப்பதையே தனது அரசியல் நோக்காக சந்திரிகா செயற்படுத்துகின்றார். ஈச்சங்குள மாவீரர் துயிலகத்தை சந்திரிகா படைகள் அழித்து அம்மையாரின் தமிழின அழிப்பு வேட்கைக்கு நீவிபோட்டுள்ளன.

தமிழர்களின் வரலாறு—கலாச்சாரம்— தேச உட்கட்டுமானங்கள் — உயிர்கள் — உடமைகள் சிறீலங்காவால் இனஅழிப்பு நோக்கில் அழிக்கப்படுகின்றன என்பது சான்றுகளுடன் தெட்டத் தெளிவாகியுள்ள இந்நேரத்தில் இவற்றை ஆதாரங்களுடன் உலகின் கண்களுக்கு கொண்டு வந்து சந்திரிகாவின் மேல் நூரம்பேர்க் யுத்தக்குற்ற நீதி மன்றத்தில் விசாரணைகளை நடாத்தும்படி உலகினைக் கேட்க வேண்டியவர்களாக புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உள்ளோம். நாம் எவ்வளவு தூரத்திற்கு வெளிவந்துள்ள உண்மைகளை உலகிற்கு திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றோமோ அவ்வளவுக்குத்தான் சிறீலங்கா தமிழர்களுக்கு அந்நிய அரசாக உள்ளது என்ற உண்மையை உலகு உணரும். அத்துடன் இவைகளினால் பாதிக்கப்பட்டு துடிக்கும் எம் மக்களினது புனர் வாழ்வுக்கும் எம் தாயகத்தினது புனர் நிர்மாணத்திற்கும் நிதி வழங்கி அவர்கள் மறுவாழ்வு பெற உதவ வேண்டியவர்களாகவும் நாம் உள்ளோம். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கு எம் மக்கள் வாழ்வு வழமைக்கு திரும்பும். எவ்வளவுக்கு எம் தேசத்தின் உண்மைநிலைமைகளை நாம் உலகிற்கு எடுத்துரைக்கின்றோமோ அவ்வளவுக்கு எம் தேசத்தின் விடுதலை விரைவு பெறும்.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(09.09.1999)






# திலீபா உன் பசியாறும்

எல்லாரும் வயிறு பசித்திருக்க
அன்று நீ மட்டும்
சுதந்திரப் பசிக்காக
சாவின் பசிக்கு
உன்னை இரையாக்கிக் கொண்டாய்
ஏனென்று பாரதம் கேட்கவில்லை
அதன் நீதி வழுக்கிக் கீழே விழுந்ததால்.
வாழும் பருவத்தினன் நீ
வருந்திச் செத்துக் கொண்டிருந்தாய்.

எம் தேசத்துப் புழுதி மணலுக்குள்
செம்மண் வயலுக்குள்
பாசத்தைத் துறந்து
பாரத்தைச் சுமந்தவன் தான்
ஆனால் அன்று
சுமக்க முடியாத ஒரு பாரத்தை
எம்மினத்திற்காய் சுமந்தாய்.
உந்திக்குப் பூட்டுப் போட்டுவிட்டு
உரிமைக்காக் குரலை உயர்த்திக் கொண்டாய்.

இந்தமண் உன்னைச் சுமந்து
நின்றதால் தான்
அவர்களைச் சுமக்க மறுத்தது.
உனது மேடைக்கருகில் அன்று
கண்களைக் கசக்கிக் கொண்டிருந்த
பிஞ்சுகள் தான்
இன்று கல்லறைக்குள்
உறங்கிக் கொண்டிருக்கின்றன.

சுதந்திரப் பறவைகளின் உரிமைக் கீதத்தை
இசைத்துச் சென்றவன் நீ.
ஈழத்தின் விடியலின் இராகங்களை
அவை இன்று இசைத்துக் கொண்டிருக்கின்றன.

திலீபா!
உனது மனம் எழுப்பிய அலைகள்
எமது தேசத்தின்
எல்லா அணுக்களாலும்
உள்வாங்கப்பட்டன.

இதோ உனது பயணத்தின் முடிவு
மிக மிக அருகில்
தாண்டிச் செல்ல உனது அளப்பெரிய
துணிவு எம்மோடு
இறுதி மூச்சிலும் கலந்திருந்த
உன் கனவு இதோ எம் இதயத்தில்

கனவென எரிந்த உன் பசி
நெருப்பு எம்மில் பற்றிக்
கொள்ளட்டும்.
அலையாக எழுந்தோம்
கடல் போல் திரண்டிடம்
நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம்.

ஆம் திலீபா! உனது பசியாறும்
எமது கைகள் கனத்திருப்பதால் தான்
சொல்லுகிறோம்.
உனது பசி பற்றிப் பிடித்ததால் தான் சொல்லுகின்றோம்
உனது பசியாறும்.

- உதயலட்சுமி -

✪✪ ✪✪ ✪✪

# வேராகி நின்று விழுதுகளைப் பரப்பியவனே!



தீபச்சுடர் திலீபா......!
தர்மப்போரிலும்
தனித்துவமானவனே......!
தலைவன் பிரபாகரனின்
தன்னிகரில்லாச் சேனையில்
வேராகி நின்று
விழுதுகளைப் பரப்பியவனே!

எமது மண்ணிலே
புரட்சிப் பூக்கள் மலர
மழையாய்ப் பொழிந்தவன் நீ!
எமது இதயங்கள் ஆற
நதியாய் நகர்ந்தவன் நீ!

அமைதி முகம் சூடி வந்த
அந்நியப்படையின் கோரவடிவை
உலகம் கண்டறியச் செய்தவன் நீ!
இதனால்......
ஈராறு நாட்கள்
இனிய இளமையை
நீராகாரம் மறுத்து
தீமூட்டி எரித்தாய்!

மக்கள் புரட்சியை தேடிய
மாண்புமிகு வீரனே......!
விடிவுக்கான பூகம்பம்
வேங்களத்தில் நடக்கிறது......!
வேங்கைகள் வெல்வர்
மலரும் தமிழீழம்
இது உறுதி!

க.சா.அரியநாயகம்

## கணப் பொழுதும் உன்னை மறவோம்!

ஓ—! மரணித்த வீரனே
எம் இனிய சகோதரனே
வீரத்தாய் பெற்றெடுத்த
விறல்மிகு வேங்கையே
அரசியல் அறிவிலே
நிகரில்லா அண்ணன் திலீபனே
களங்கள் பல கண்டு - வீரத்
தழும்புகள் பல சுமந்து
உன் வீர உடலின்று
நாற்பது இலட்சம் தமிழ் மக்களின்
இதய நாதத்தை தமிழீழத் தாயகம்
என்ற தாரக மந்திரத்தை
உன் உதடுகளில்
உச்சரித்தபடி மரணித்தாய்.
தியாக சீலனே——
நீ உருகிப்போன
மெழுகுவர்த்தி
அணைந்த தியாக தீபம்
அண்ணன் திலீபன் நீ.
எமது மக்கள் மனதில்
சுடர் விட்டெரியும் அகல் விளக்கு
ஏறுக்கு மாறாக எண்ணங்கள் சிதைந்து
தாறுக்கு தாறாக
தோல்வியை பெறும் போது
நீறாகிக் கனலாய்
நெஞ்சத்தின் துன்பச்சுமை
ஆறாகப் பெருகிட - அது
கண்ணீரால் அடங்குமா
நாளுக்கு நாள் எங்கள்
சகோதரரை இழந்தோம்
அன்று களத்திலே போராடி
வீரமரணம் தானே என இறுமாந்தோம்
இன்று அகிம்சை வழியிலே
அறப்போராய் நீ இறந்தாய்
எம்மால் அடக்க முடியாமல்
அழுகைதான் வருகிறது
எது எப்படி நேரினும்
உங்கள் இழப்பு
எங்களை உரம் பெறச் செய்கிறது
அடிமை விலங்கொடிக்க
அதி தீவிரமாய்த் தூண்டுகிறது
தமிழீழம் மட்டும் தான்
எங்கள் தீர்வு என்ற உறுதியால்
தினம், தினம் - நீங்கள்
இறந்துவிட்ட போதும்
சோகத்தில் சுகம் காண
நாளும் பழகிவிட்டோம்
ஏன் தெரியுமா?
நாம் காத்திருக்கும்
விடியல்
இன்னும் தூரத்திலில்லை
என்று நம்பிக்கை
எம் நெஞ்சத்தை நிறைப்பதால்.
எம்மைப் பிரிந்த
எம் அன்பான சகோதரனே
கலங்காதிரு நீ
உன்னை நாம்
கணப்பொழுதும் மறவாமல்
உன் தாகம் தீர்க்க
உன்னால் கட்டி
வளர்க்கப்பட்ட நாம்
உன் இலட்சியம் தழைக்க
உனது பாதையில் வருவோம்
இறுதித் தீர்வை
உறுதியாய் தேடுவோம்
உன்மேல் ஆணையாக
இது உண்மையிலும் உண்மை
வாழ்க தமிழீழம்!
வளர்க திலீபன் இலட்சியம்.

('திலீபம்' நினைவுமலரிலிருந்து...)